புதுமலர்: 14 இதழ்: 02 பங்குனி - சித்திரை

# அனல்

01.03.2017

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்:

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

- ரோமர் 12:11 -



## பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களின் சாட்சி வாழ்வு!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# பொருளடக்கம்


01. அனலின் சத்தம்

02. கதையும் கற்றதும் - அன்பான செயல்

03. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 112

04. பரத்திலிருந்து வருகிற ஞானமோ

05. பெண்கள் பக்கம் - சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்

06. நற்செய்திப்பகுதி - அன்பைத் தேடி

07. தேவ பணியாளர் பட்டறை


08. சிறுவர் வட்டம் - நன்றியுள்ளவர்களாய் இருங்கள்

09. அருட்பணியாளர் சரிதை - ஆன் ஜட்சன், வீர சூரியா

10. வினா விடை - 80

11. குறுக்கெழுத்துப்போட்டி - 78

12. அனலின் ஆன்மீக விருந்து

## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள், உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய முகவரி:



சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.



**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

## மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:



ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

# அனலின் சத்தம்

தேவனுடைய தூய நாமத்திற்கு மகிமையுண்டாவதாக. ஜோதிகளின் பிதாவானவர் திருவுளம் பற்றிய தம் வாக்குத்தத்தங்களில் இதுவரை எமக்கு உண்மையுள்ளவராக செயலாற்றியிருக்கின்றார். இப்புதிய வருடத்தில் இரண்டாவது சஞ்சிகையூடாக மறுபடியும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நிரந்தரமான சந்தோஷம், சமாதானம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் உண்டு. என் சமாதானத்தை உங்களுக்கு வைத்துவிட்டுச் செல்கிறேன் என வாக்குப்பண்ணியவர் இயேசு கிறிஸ்து. அவரை நம்புகிற, விசுவாசிக்கின்ற ஒவ்வொருவரின் இருதயமும் அவருடைய இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரப்பப்படச் செய்வார்.

உங்கள் துக்கங்கள், துன்பங்கள், பாடுகள் எவையானாலும் அவைகளைத் தாங்கும் சுமை தாங்கியாக இயேசு கிறிஸ்து இருக்கின்றார். இறக்கி வைப்பீர்களா உங்கள் பாரங்களை இயேசுவிடம்;

ரோமர் 8:32 சொல்கிறது: "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடு கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி"

நிரந்தர உத்தரவாதம் இந் நாட்களில் நமக்குண்டு. அதை தேவனே கொடுத்திருக்கிறார். எனவே சோர்ந்து போன சகோதரனே, சகோதரியே உனக்கு நன்மை செய்வதற்காகவே தேவன் ஆவலாய் இருக்கிறார். அவர் பக்கமாய் திரும்பு, அவரை நம்பு, அவரின் உறவுக்குள் வா! உன்னோடு அவர் கூட தங்கி உன்னை ஆசீர்வதிப்பார்.

**- ஆசிரியர் -**




ஒரு மனிதனும் அவனுடைய மனைவியும் ஒவ்வொரு நாளும் சிறிய பழக்கடை ஒன்றை வைத்திருக்கும் பாட்டி ஒருவரிடம் ஒரேஞ் பழங்களை எடை போட்டு வாங்குவது வழக்கம். ஒவ்வொரு நாளும் இந்த கணவனும் மனைவியும் தங்களுடைய அலுவலக வேலைகள் முடிவடைந்து வீடு வரும் போது மாலை நேரத்தில் அந்த பாட்டியிடம் ஒரேஞ் பழங்களை இவ்வாறு எடைபோட்டு வாங்குவது வழமையாக நடைபெற்று வந்தது. இவ்வாறு ஒவ்வொரு முறையும் ஒரேஞ் பழங்களை வாங்கும் போதும் இந்த மனிதன் என்ன செய்வார் என்றால், அந்த ஒரேஞ் பழங்களை வாங்கி அதில் ஒன்றை எடுத்து பிரித்து சிறிய துண்டை சாப்பிட்டுப் பார்த்துவிட்டு, பாட்டி இந்த பழத்தைப் பாருங்கள் இது நன்றாக இல்லை, புளிப்பாக இருக்கிறது, வேண்டுமானால் நீங்களே இதை சாப்பிட்டுப்பாருங்கள் என்று சொல்லி அந்த பழத்தை அந்த பாட்டியிடம் கொடுத்து அவரை சாப்பிடவைப்பார். அந்த பாட்டியும் அந்த பழத்தை வாங்கி சாப்பிட்டு, இல்லையே இந்த பழம் புளிக்கவில்லையே, நன்றாகத்தானே இருக்கிறது என்று சொல்வார்கள். உடனே இந்த மனிதன் அமைதியாக தான் வாங்கிய மிகுதி ஒரேஞ் பழங்களைக் கொண்டு சென்றுவிடுவார்.

இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருக்கும் போது ஒரு நாள் அவனுடைய மனைவி அவனைப் பார்த்துக் கேட்டாள்: என்னங்க, அந்த பாட்டி விற்பனை செய்யும் ஒரேஞ் பழங்கள் நன்றாக இருக்கிறது, இனிப்பாக இருக்கிறது, அதனால் தான் ஒவ்வொரு நாளும் அவரிடம் சென்று ஒரேஞ் பழங்களை வாங்கிக் கொள்கின்றோம். ஆனால் ஒவ்வொரு நாளும் நீங்கள் ஒரு ஒரேஞ் பழத்தை எடுத்து பிரித்து சாப்பிட்டுவிட்டு இது நல்லதில்லை என்று சொல்லி அந்த பாட்டியிடம் கொடுத்துவிடுகின்றீர்கள். ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்? என்று

கேட்கும் போது அந்த மனிதன் தன் மனைவியிடம் சொல்கிறான்: அந்த பழங்கள் நல்லவை என்பதும் அந்த பாட்டி விற்பனை செய்யும் பழங்கள் அனைத்தும் நல்ல சுவையானவை என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் அந்த பாட்டி மிகவும் வயதானவர், அவரைக் குறித்து நான் சிலரிடம் விசாரித்திருக்கிறேன். அவ்வாறு விசாரிக்கும் போது தான் கண்டுகொண்டேன் அவர் மிகவும் வறுமைப்பட்டவர், அத்துடன் அவரது மகளும் மனநிலை பாதிக்கப்பட்டவர். அந்த மகளை பராமரிப்பதற்கு இவர் மிகவும் கஷ்டப்படுகிறார். அதனால் தான் இந்த வயதான காலத்திலும் இவ்வாறு பழங்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறார். இதனால் அவர் நன்றாக சாப்பிடுவாரோ தெரியாது. ஆகவே என்னால் முடிந்த காரியம் இது தான் அவரிடம் அந்த பழத்தை பணத்திற்கு வாங்கி அதில் ஒன்றை தினமும் அவரையே சாப்பிட வைக்கவேண்டும் என்பதற்காக இதைச் செய்கிறேன் என்றான். இதைக் கேட்ட அவன் மனைவி மிகவும் சந்தோஷப்பட்டாள். தன் கணவன் எவ்வளவு நல்ல உள்ளம் கொண்டவன் என்று தனக்குள்தானே பூரித்தாள்.

அதே நேரம் இந்தப் பாட்டி பழங்களை விற்பனை செய்யும் இடத்திற்கு அருகில் இன்னொரு மனிதன் மரக்கறிகளை விற்பனை செய்து கொண்டிருந்தார். அந்த மனிதனும் ஒவ்வொரு நாள் மாலையிலும் இந்தப் பாட்டியின் கடையில் இந்த மனிதன் வந்து ஒரு பழத்தை பிரித்து கொடுக்கும் காரியத்தைப் பார்த்துக் கொண்டேயிருப்பார். ஆகவே ஒரு நாள் அந்த மரக்கறி விற்கும் மனிதன் அந்த பாட்டியைப் பார்த்து கேட்டார், என்னம்மா நீங்கள் விற்பனை செய்யும் பழங்கள் நன்றாகத் தான் இருக்கிறது. அது உங்களுக்கும் தெரியும், அந்த மனிதனுக்கும் தெரியும். ஆனால் ஒவ்வொரு நாளும் அந்த மனிதன் ஒரு பழத்தை எடுத்து புளிக்கிறது என்று சொல்லி உங்களிடம் கொடுத்துவிட்டு செல்கிறார். நீங்களும் அவரை எதிர்த்து பேசுவதில்லை. அத்தோடு நானும் கவனித்துப் பார்க்கிறேன், அந்த மனிதன் கேட்கும் பழங்களை நீங்கள் தராசில் போட்டு நிறுக்கும் போது நிறைக்கு சற்று அதிகமாகத் தான் போட்டுக் கொடுக்கிறீர்கள். ஏன் இப்படிச் செய்கிறீர்கள். அவர் தினமும் குறை சொல்லி ஒரு பழத்தைக் கொடுத்துவிட்டுச் செல்கிறார். ஆனால் நீங்களோ நிறைக்கு அதிகமாக அவருக்கு பழங்களைக் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்.

அதற்கு அந்த பாட்டி சொன்னார்: ஆம் எனக்குத் தெரியும் என்னுடைய பழங்கள் நன்றாகத் தான் இருக்கிறது. நான் பழங்களை நன்றாகப் பார்த்துத் தான் வாங்கி விற்பனை செய்கிறேன். அத்தோடு என்னிடம் தினமும் வந்து பழங்களை வாங்கும் அந்த மனிதனுக்கும் தெரியும் அந்தப் பழங்கள் அனைத்தும் நன்றாக இருக்கிறது என்பது. அதனால் தான் அவர் தினமும் வந்து என்னிடம் பழங்களை வாங்குகிறார். ஆனால் அவர் எனக்கு ஒவ்வொரு நாளும் ஒரு பழத்தையாவது சாப்பிடத் தரவேண்டும் என்று விரும்புகின்றார் என்பதும் எனக்குத் தெரியும். அதனால் தான் நானும் நிறைக்கு அதிகமாக பழங்களை எடைபோட்டு அவருக்கு கொடுக்கிறேன். அவரும் அதைத் தெரியாமல் ஒவ்வொரு நாளும் எனக்கு ஒரு பழத்தை தந்துவிட்டு செல்கிறார். இது என்னால் அவருக்கு செய்யக்கூடிய

சிறியதொரு உதவி என்று அந்த மரக்கறி கடைக்காரரிடம் இந்தப் பாட்டி கூறினார். இதைக் கேட்ட அந்த மரக்கறி கடைக்காரர் மிகவும் ஆச்சரியப்பட்டார்.

ஆம் நண்பர்களே இந்த இருவரும் நடந்து கொண்ட காரியம் எவ்வளவு சந்தோஷமான காரியம். இவர்கள் இருவரும் சம்பந்தமே இல்லாதவர்கள், ஆனால் வெவ்வேறு வழிகளில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறவர்களாக, அன்பு செய்கிறவர்களாக காணப்படுகிறார்கள். ஆனால் இன்றைய நாட்களில் நம்மைச் சுற்றிலும் நடைபெறுகிற காரியங்களைப் பார்க்கிற போது எங்கும் பயங்கரம், எங்கும் அன்பற்ற செயல்கள், எங்கும் கொலைகள், கொள்ளைகள், ஏமாற்றங்கள். இதற்கு காரணம்: மனிதர்கள் மீது மனிதர்களுக்கு அன்பற்ற செயல்கள். மனித மனங்கள் மரத்துப்போன நிலையைக் காண்கிறோம். மனிதர்கள் மிருகங்களாக மாறி மற்றவர்களை காயப்படுத்துகிற, மற்றவர்களை சாகடிக்கிற நிலைக்குள் கடந்து செல்கின்றார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாங்கள் எப்படி வாழ்கிறோம்? எம்முடைய சொற்கள், செயற்பாடுகள் தானும் மற்றவர்களை காயப்படுத்தக்கூடாது. தேவைகளோடு எம்மைச் சுற்றிலும் இருப்பவர்களில் எம்மால் இயன்ற சிறிய உதவியையாவது செய்கிறோமா? தேவனுடைய அன்பு எமக்குள் இருக்குமாயிருந்தால் நாம் மற்றவர்களை காயங்கட்டுகிறவர்களாக, அன்பு செய்கிறவர்களாக மாறுவோம். மற்றவர்களை நேசிக்க அன்பு செலுத்தக் கற்றுக் கொள்வோம். **1யோவான் 4:12 தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.**


## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

நாட்டிலும், காட்டிலும், மேட்டிலும் ஓடுவேன்: ஆனால் கன்மலையில் ஓடமாட்டேன் நான் யார்?

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனல் 2017 தை - மாசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**முத்திரை மோதிரம்**



விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.







போதகர் வேதநாயகம் சுமணன்

# எரேமியாக்கள் எழும்பட்டும் தேசத்தில்

யூதா ராஜ்யத்தின் தீர்க்கதரிசியாக எரேமியா அழைக்கப்பட்டான். இவன் ஆனதோத் ஊரானாகிய இல்க்கியா ஆசாரியனின் குமாரன். எரேமியா எருசலேம் மேல் வரப்போகிற தேவ தீர்ப்புக்களை கூறியதின் நிமித்தம் துன்புறுத்தப்பட்டான். இவனது ஊழியம் அந்த ராஜ்யத்தின் இறுதி நாற்பது வருடங்கள் செயற்பட்டது. எருசலேமின் அழிவுக்கு முன்னான நாட்களிலும், பாபிலோனுக்கு தேவஜனம் கொண்டு செல்லப்பட்ட நாட்களிலும் இவனது (எரேமியாவினது) ஊழியம் நடந்தது. ஜனங்கள் தேவனை எதிர்த்து மற்ற ராஜியங்களின் உதவியோடு தங்களது எதிரிகளிடமிருந்து விடுதலைபெற நாடினார்கள்.

நல்ல ராஜா யோசியாவின் நாட்களில் தனது ஊழியத்தை ஆரம்பித்த எரேமியா யோசியாவின் சீர் திருத்தங்கள் மக்களின் இருதயத்தில் உண்மையான மாறுதலை கொண்டுவரவில்லை என்பதை கண்ட எரேமியா; **தேசமெங்கும் உண்மையான மனந்திரும்புதல் இல்லை என்றால் நியாயத்தீர்ப்பும் அழிவும் திடீரென்று வரும் என்று எச்சரித்தான்.** அவனது செய்தியினாலும், தேவனிடத்தில் இருந்த அவனது பக்தியினாலும் அதிகமான எதிர்ப்பையும் துன்பங்களையும் அவன் அனுபவித்தான்.

# எரேமியா

**எரேமியா 1:1 பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய இல்க்கியாவின் குமாரன் எரேமியாவினுடைய வசனங்கள்:**

பலவேளைகளில் ஜனங்களுக்காக துக்கித்து அழுதான். இதினிமித்தம் "கண்ணீர்விடும் தீர்க்கன் அல்லது புலம்பும் தீர்க்கதரிசி" என்றும் அழைக்கப்படும் எரேமியா கடினமான செய்தியை அறிவிப்பவனாயினும் உணர்வுமிக்க, நொறுங்கிய இருதயம் கொண்ட மனிதன். அவனது இளகிய ஆவியானது தேவனின் திட்டத்திற்கே/ வேலைக்கே முதலிடம் கொடுத்தது. ஜீவியம் முழுவதும் புறக்கணிப்பும் தனித்துவிடப்படும் நிலை காணப்பட்டாலும் அதிக தைரியம் மிக்கவனாயிருந்தான்.

## உருவாக்கமும் கூடவே அழைப்பும்

**எரேமியா 1:5 நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.**

*"Before I formed you in the womb I knew you and before you were born I Consecrated you; I appointed you a prophet to the nations" (ESV)*

*"Before I shaped you in the womb, I knew all about you. Before you saw the light of day, I had holy plans for you. A prophet to the nations that's what I had in mind for you" (The massage Bible)*

தேவனுடைய திட்டங்களும் தீர்மானங்களும் மிகவும் ஆச்சரியமானதும் வித்தியாசமானதுமாகும். எரேமியா பிறப்பதற்கு முன்பதாகவே அவனைக் குறித்த நோக்கத்தை *(Purpose)* அவனது வாழ்விலே வெளிப்படுத்தி பயன்படுத்திவிடவேண்டும் என்பதிலே அதிக ஆர்வமுள்ளவர் நாம் ஆராதிக்கும் ஆண்டவர் இயேசு. எரேமியா தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும் என்று தேவன் நிச்சயித்து இருந்தார். தன்னுடைய ராஜ்யத்தின் வேலைத்திட்டத் திலே எவ்வாறாயினும் தன்னால் இயன்ற பங்கை ஒவ்வொருவரும் செய்யவும், அதற்காகவுமே தேவன் தன்னுடைய அழகான விலை யேறப் பெற்ற திட்டத்தை செயலாற்றி மகிழத்துடிக்கின்றார்.

அது எரேமியாவிற்கு மட்டுமல்ல இதை வாசிக்கும் தம்பி, தங்கையே உன்னுடைய வாழ்விலும் தேவன் ஓர் ஆச்சரியமான அழகான திட்டத்தை வைத்திருக்கிறார் மறந்துவிடாதே. "அவரது நோக்கம் என்னவென்றால் அவரது சித்தத்தின்படி வாழ்ந்து அவரது திட்டத்தை நிறைவேற்ற எம்மை அனுமதிக்க வேண்டும்". இது மிகவும் கடினமானதும் ஆபத்து நிறைந்ததுமாகும். தன் வாலிபத்தை ஆண்டவர் கரத்தில் ஒப்படைத்த எரேமியா பலவிதமான துன்பங்களை, கண்ணீரின் நிலைகளை வாழ்க்கையில் சந்தித்தவன் பலமுறை தேவ ஜனங்களாலும், அதிகாரங்களாலும் நிராகரிக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டு, காவல்களிலும், உளையான சகதியிலும், ஆளமான குழியிலும் போடப்பட்டும் கூட தன் விசுவாசத்தை விட்டுவிடாத வீரமுள்ள வாலிபன் எரேமியா.

தேவன் அவனை திட்டமும் தெளிவுமாக தன்பணிக்கு பிரித்து வைத்ததை விளக்கப்படுத்தி கூறிய போதும் கூட ஆண்டவரே நான் பேச அறியேன் சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றான். எல்லாவிதமான சிறுபிள்ளைத் தனத்திற்கும் மேலாக உன் வாழ்வில் தேவ அழைப்பு/ பரம அழைப்பு செயலாற்ற வல்லமை யுள்ளது என்பதை நம்பு. உன்னால் முடியும், தேவன் உன்னைக் கொண்டு செய்ய நினைத்ததற்கு நீ சாட்டு போக்குச் சொல்லித் தட்டி விடாதே. நீ ஆண்டவருக்குத் தேவை. உனது கரங்கள் அவரின் சேவைக்கு தேவை! தேவை! என்பதை தெரிந்து கொள்.

ஒருவேளை தேவபணியில் இருக்கும் தம்பியாக/தங்கையாக நீ இருக்கலாம். உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். **11பேதுரு 1:10 ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும் படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.**

தேசங்களுக்கு தீர்க்கனாக அழைக்கப்பட்ட எரேமியா ஆசாரிய ஊழியத்திலே ஆசாரியனுக்குரிய சகல சலுகைகளையும் பெற்று அவற்றிலே வாழவும், பணிசெய்யவும் தன்னை திருப்திப்படுத்திக் கொண்டான். ஆண்டவரோ இல்லை, எரேமியாவே உன்னை நான் இதற்காக உருவாக்க வில்லை. இது உன்னுடைய வேலை இல்லை என்று எரேமியாவின் வாழ்வில் குறுக்கீடு செய்து, சரியான அவனுக்கு தான் ஏற்படுத்தின பாதையிலே பணிசெய்ய சக்கரத்தை திருப்புகிறார். தனக்கு வாயாக இருக்கும்படியாக புறக்கணிப்பும், துன்பமும் யாரும் விரும்பி ஏற்காத ஒரு பணிக்கு/வேலைக்கு.

இந்தக் காலம் வாலிபர்கள் எரேமியா போன்று எழும்ப வேண்டிய காலம். அழைப்பில் தேவ ஆசீர்வாதம் உண்டு. ஆனால் அவை பாடுகளில்லாமல் எக் காலத்திலும் வாழ முடியாது.

# பயப்படாமல் பணிசெய்ய அழைப்பு

(பயம் தேவபணிக்கு பாதிப்பு)

**எரேமியா 1:8 நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும் படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி,** தேவ அழைப் போடு கூட தேவபாதுகாப்பும் ஒரு மனிதனுக்கு வருகின்றது. அவரை அறியாமல் அழைப்பு பெற்ற மனிதனின் வாழ்வில் ஒன்றும் நடப்ப தில்லை. அழைப்பை பெற்ற நேரத்திலே எரேமியா ஓர் வாலிபனாக இருந்தான். தேசத்தின் பலதரப்பட்ட நிலையிலுள்ளவர்களுக்கு (ராஜாக்கள், மூப்பர்கள், அதிகாரிகள்) தேவனுடைய வசனத்தை பேசவேண்டும் என்று எண்ணிய போது அவன் **அதிகமாய் பயப்பட்டான்.** அழைப்பை நிறைவேற்ற அழைத்தவர் அவன் கூட இருப்பதாக உறுதியளிக்கிறார்.

---

தேசம் தேவனை அறியவேண்டும், தேவநாமம் மகிமைப்பட வேண்டும் என்பதே அழைப்பின் ஒரே நோக்கமாகும். தேவன் தன்னுடைய பிரசன்னத்தையும் உதவியையும் எப்போதும் உனக்கு தரவாக்களிக்கிறார். தேவனின் சேனையில் உனக்கும் ஓர் இடம் உண்டு. எரேமியாவே உன் செய்திகள் அனைத்தும் என்னாலே (தேவனாலே) ஏவப்பட்டு வரும் என்று உறுதியளிக்கின்றார். அவனது வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாகவே இருக்கும். இதிலே எரேமியா உறுதிபூண்டு தேவனுடைய வார்த்தையை மாற்றவோ பிறருக்கு ஏற்றவாறு பேசவோ செய்யவில்லை.

---

**எரேமியா**

- எரேமியாவின் தகப்பனின் பெயர் என்ன?
- எரேமியாவின் ஊர் எது?
- எரேமியாவின் பெயரின் அர்த்தம் என்ன?
- எந்த ராஜாவின் நாட்களில் எரேமியா பணி செய்தான்?
- எப்போது தேவன் எரேமியாவை அறிந்தார்?
- தாயின் கர்ப்பத்திலிருந்து வரமுன்னே தேவன் செய்த காரியங்கள் எவை?
- தீர்க்கதரிசி என்பவன் தேவனுடைய..........செயல்படுபவன்
- அழைப்பு வரும் போது எரேமியாவின் பருவம் என்ன?
- தேவ அழைப்போடு கூட வேறு என்ன வருகின்றது?
- எரேமியாவின் அப்பாவின் தொழில் என்ன?
- பயம் தேவபணிக்கு எதனைக் கொண்டு வரும்?

தொடரும் எரேமியாவின் சுவடு...

# பரத்திலிருந்து வருகிற ஞானமோ...

ரேமா

சுத்தமுள்ளதாயும்

சமாதானம் சாந்தம் இணக்கமுள்ளதாயும்

இரக்கத்திலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும்

பட்சபாதமில்லாததாயும்

மாயமற்றதாயுமிருக்கிறது.

# பரத்திலிருந்து வராத ஞானமோ...

லௌகீக சம்பந்தமானதும்

ஜென்ம சுபாவத்திற்குரியதும்

பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது

வைராக்கியமும் விரோதமும்

கலகமும் துர்ச்செய்கையுமுண்டு

தேவ கிருபையினால் எங்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் பரத்திலிருந்து வருகிற ஞானம் எங்களை நிரப்பி நடத்த நாம் பிரயாசப்படுவோம், வாஞ்சிப்போம், செயற்படுவோம். ஆண்டவரே என்னை உம்முடைய வசனத்தினாலும், நீர் விரும்பும் நற்கனிகளினாலும் நிறைத்து பிறருடைய வாழ்வில் நன்மை உண்டாக்குகிற நல்ல ஞானமுள்ள பிள்ளையாக நிரப்பி நடத்துவீராக...

*(மாயமற்ற வாழ்விற்கு அவசியம் பரத்திலிருந்து வருகிற ஞானம்...)*







ரூத், எஸ்தர் இருவரும் கிறிஸ்தவ நண்பர்கள். இருவரும் ஓர் அறையில் இருந்து படித்துக் கொண்டிருப்பவர்கள். அவர்களுடன் படிக்கும் நண்பர்கள் மத்தியில் வாக்குவாதங்களும், பிரிவினைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஆனால் இவர்கள் இருவரும் நல்ல ஒற்றுமையாக இருப்பார்கள். ஒரு நாள் இருவரும் யோசித்தார்கள்: நாங்கள் இருவரும் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம் எங்கள் இருவருக்கும் இடையே சண்டை ஏற்படுவதில்லை. நாமும் ஒரு நாள் சண்டையிட்டுப்பார்ப்போம் என்று. ஆகவே இப்போது சண்டையை எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த போது, ரூத் ஒரு சீப்பை எடுத்து வைத்து, இது என்னுடையது என்று நான் கூறுவேன். ஆனால் இல்லை இது என்னுடையது என்று நீ கூறவேண்டும் என்று திட்டம் தீட்டி சண்டையை ஆரம்பித்தார்கள். ரூத் இது என்னுடைய சீப்பு என்றாள். அதற்கு எஸ்தர் இல்லை இது என்னுடையது என்று கூறினாள். இப்படியாக ஐந்து தடவை இருவரும் மாறி மாறி கூறினார்கள். இறுதியில் ரூத் இது உன்னுடையது என்றால் நீயே இதை எடுத்துக் கொள் என்று கூறினாள். அதற்கு எஸ்தர் உடனடியாக இல்லை இது உன்னுடையது என்றால் நீயே எடுத்துக் கொள் என்றாள். உடனடியாக சண்டை பெரிய சிரிப்பு சத்தம் மூலம் சமாதானமாய் முடிவடைந்தது.

ஏனெனில் இவர்கள் இருவரதும் வாழ்க்கையில் தேவசமாதானம், தேவ அன்பு, தேவ பயம் நிறைந்தவர்களாய் காணப்பட்டதால் சண்டை

ஏற்படமுடியாமல் போனது. வேதாகமத்திலும் ஒரு புத்திசாலியான ஸ்திரீ தன்னுடைய குடும்பத்திற்கு பொல்லாப்பு கொண்டுவர இருந்த நபருடன் சமாதானம் பண்ணி எல்லோரையும் அந்த பொல்லாப்பிலிருந்து காப்பாற்றினாள்.

அவள் யாராக இருக்கும்? **அவள் தான் அபிகாயில். 1சாமுவேல் 25:3 இவளே மகா புத்திசாலியும், ரூபவதியுமாயிருந்தாள்.** அதுமட்டுமல்ல, ஒரு பெரிய பணக்காரனுடைய மனைவி. இவளுடைய புருஷனோ முரடனும் துராகிருதனுமாயிருந்தான். இவனுடைய பெயர் நாபால். தாவீது தன்னுடைய வாலிபருக்கு உதவி கேட்டு, நாபாலிடம் சில வாலிபரை அனுப்பியிருந்தான். நாபால் அதற்கு இணங்காமல் கோபமாக அந்த வாலிபரை ஏசி, உதவி செய்ய மறுத்துவிட்டான். வாலிபர் நாபால் கூறியதை தாவீதிடம் கூறிய போது தாவீது மிகவும் கோபமடைந்து நாபாலின் குடும்பத்தையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துப்போட ஆயத்தமாகினான்.

அந் நேரத்தில் வேலைக்காரரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலிடம் அவள் குடும்பத்திற்கு வரவிருக்கும் பொல்லாப்பை அறிவித்தான். **ஐசுவரியவானுடைய மனைவி, ரூபவதி, வீட்டின் எஜமாட்டியாகிய அபிகாயில் எனக்கென்ற என்னுடைய கணவன் முரடன், அவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வான் என்று அமைதியாக இருக்கவில்லை. அல்லது கணவனிடம் ஓடிச்சென்று; வேலைக்காரனையும் கூட்டிக் கொண்டு காரியத்தை அறிவிக்கவில்லை.**

மாறாக அவள் தீவிரமாய் காரியத்தில் ஈடுபடுகிறாள். **1சாமுவேல் 25:19 தாவீதை சந்திக்க புறப்படுகிறாள். அவனுடைய புருஷனாகிய நாபாலிடம் இதை அவள் அறிவிக்கவில்லை.** அபிகாயில் தாவீதைக் கண்டவுடன் கழுதையை விட்டு இறங்கினாள். விழுந்து, பணிந்து தன்னுடைய வார்த்தைகளைக் கேட்கும்படி கேட்டாள். தன்னுடைய கணவனின் நிலையை எடுத்துக்கூறினாள். மன்னிப்புக்கேட்டாள். அதுமட்டுமல்ல தன்னுடைய குடும்பத்திற்கு பொல்லாப்பு செய்ய வந்த தாவீதை வாழ்த்துகிறாள். ஆபிகாயில் தாவீதைப் பார்த்துக் கூறுகிறாள்: **1சாமுவேல் 25:28 கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான வீட்டை நிச்சயம் கட்டுவார்; என் ஆண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவராமே; நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக.** என்று நல் வார்த்தைகளைப் பேசுகிறாள்.

அதுமட்டுமல்ல, **சரியான நேரத்தில் தாவீதை சந்திக்கிறாள். அவளுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்ட தாவீது, என் கை பழிவாங்காதபடிக்கு, நீ இன்றைய தினம் எனக்கு தடை பண்ணினபடியால் நீயும் ஆசீர்வதிக்கபடுவாயாக** என்று அபிகாயிலை வாழ்த்தினான். பொல்லாப்பு செய்ய வந்த தாவீது அபிகாயிலின் செயல் மூலம்; **1சாமுவேல் 25:35 அவளைப் பார்த்து: நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப் போ; இதோ, நான் உன்**

**சொல்லைக்கேட்டு, உன் முகத்தைப் பார்த்து, இப்படிச் செய்தேன் என்றான்.**

இதை வாசிக்கும் அன்பு சகோதரிகளே, **மத்தேயு 5:9 சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.** உனக்கு தேவ புத்திரர் என்ற பாக்கியம் கிடைக்க வேண்டுமானால் அபிகாயிலின் வாழ்க்கையை சற்று ஆழமாய் சிந்திப்பாயா? புருஷன் சமாதானத்துக்கு எதிரானவன். ஆனால் **அபிகாயில் குடும்பத்திற்கு வரவிருந்த பொல்லாப்பை அறிந்து சமாதான முயற்சியில் ஈடுபடுகிறாள்.** வேலைக்காரன் அபிகாயிலுக்கு பொல்லாப்பு வரப்போகிறதை அறிவிக்கிறான். ஏனெனில் **வேலைக்காரர்களுக்கும் அபிகாயிலுக்கும் நல்ல சமாதான உறவு காணப்பட்டிருக்கலாம்.** நாபால் அவர்கள் பேரில் சீறினான். ஆனால் அபிகாயில் சீற்றம் அடையவில்லை. மாறாக பொல்லாப்பு செய்யவருகிறவர்களுடன் தீவிரமாய் சமாதானம் பண்ணப்புறப்படுகிறாள். பொல்லாப்பு செய்ய வருகிறவர்களை கண்டவுடன் கழுதையைவிட்டு இறங்குகிறாள். ரூபவதி, செல்வந்தனுடைய மனைவி, புருஷன் முரடன், கழுதையின் மேல் இருந்து தாவீதுடன் பேசி இருக்கலாம். ஆனால் அவள் கழுதையை விட்டு இறங்குகிறாள். இது அவளுடைய தாழ்மையைக் காண்பிக்கிறது.

தாவீதுக்கு முன் முகங்குப்புற விழுந்து பணிந்து, தன்னுடைய புருஷனின் நிலையை விளக்குகிறாள். மன்னிப்பு கேட்கிறாள். தாவீதை வாழ்த்துகிறாள். **1சாமுவேல் 25:37 புத்தி சாலியான ஸ்திரீ முதலில் கணவனுக்கு ஒன்றும் அறிவிக்கவில்லை. பின்னர் வெறி தெளிந்த பின்பு நடந்த சம்பவத்தை அவனுக்கு அறிவித்தாள்.** அபிகாயிலின் சமாதான முயற்சிகளை வாசிக்கும் போது நீயும் யாருடனும் சமாதானம் பண்ணவேண்டும் என்று எண்ணலாம். **ஆனால் உன் கௌரவம், சொத்து, படிப்பு, உன் அழகு அதைச் செய்யவிடாமல் தடை செய்யலாம். அபிகாயில் கழுதையைவிட்டு இறங்கியது போல் உன் பெருமை என்னும் கழுதையைவிட்டு நீ இறங்க வேண்டும். அப்போது உன் வாழ்வில் தேவசமாதானம் உன்னை ஆளும். மட்டுமல்ல, தேவபுத்திரர் என்னும் பாக்கியம் உனக்கு கிடைக்கும்.**

**சங்கீதம்34:14 தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்.**

**தீங்கைப் பிணைக்கிறவர்களின் இருதயத்தில் இருக்கிறது கபடம்; சமாதானம் பண்ணுகிற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோஷம்.**
**நீதிமொழிகள் 12:20**

J.கிறேசியன்



# அன்பைத் தேடி...




**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மறுபடியும் இந் நற்செய்திப்பகுதி ஊடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.**

நாம் பொதுவாக உலகை ஆழ்ந்து நோக்கும் போது அன்பிற்காக அகிலத்தின் அனைத்து மனங்களும் அலைபாய்கின்றன. மட்டுமல்ல அன்பிற்கான ஏக்கம், தவிப்பு உலகில் பல மனிதர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கியுள்ளது. பலரது வாழ்வினை சிரழித்துள்ளது. காரணம் அன்பின் மாயம்.

**ஆனால் தேவன் அன்பின் சொரூபியாக உலகில் வாழ்ந்த போது உலகம் ஒருமுறை அதனை மனித உருவில் நிரூபித்தது. 1யோவான் 4ஆம் அதிகாரம் அன்பின் முக்கியத்துவத்தை குறித்து அதிகமாக பேசுகிறது.**

எம்முடைய மனுஷீக வாழ்வில் உண்டான ஏமாற்றங்கள், தோல்விகள், புறக்கணிப்புக்கள், நாம் நம்பியவர்கள் எம்மை புறக்கணித்த போது உண்டான இதய வலி, எம்முடைய இருதயத்தில் உண்டான ரண காயங்கள், எம்மால் எப்போதும் எம்மைப்பார்த்து கேலி செய்வதாக வேயுள்ளது. இது தான் உலக நியதி.

**ஆனால் எம்மை உண்டாக்கினவர் எப்படி எம்மைப் பார்க்கிறார்?**

**1யோவான் 4:10 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.** அன்புள்ள தேவன் உலக

மக்களாகிய எம்மீது அன்புள்ளவராக இருக்கிறார். தேவன் எம்மீது கொண்டுள்ள அன்பு உண்மையானதே. **எனவே தான் பாவிகளும், துரோகிகளும், அக்கிரமக்காரர்களுமாகிய எமக்காக, எம்முடைய பாவங்களை போக்கும் பலியாக தேவன் தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவை அனுப்பினார்.** இதன் மூலம் நாம் தேவனிலும் தேவன் எம்மிலும் வாழ்வதைக் காணலாம். இதற்கு காரணம் தேவ அன்பு ஆகும். "அன்பு" என்பது சொல்வதற்கு மிகவும் எளிமையானதாக காணப்படுகிறது. ஆனால் ஜீவியத்தில் மிக கடினமானதே. அன்பை வெளிப் படுத்தல் என்பது மிக மிக கடினமானது. ஆனால் அதற்காகத் தான் நாம் அழைக்கப்பட்டோம்.

கடினமான அந்த மாயையை நம் பின்பற்றி அனுதினமும் பின் தொடர்ந்தால் காலப்போக்கில் இயல்பாக அது எம்முடைய வாழ்க்கை முறையாகிவிடும். இயேசு கிறிஸ்து இவ்வுலக வாழ்வை முடித்து அவர் புறப்படும் போது அவர் வெறுமை யாகச் செல்லவில்லை. **தம்முடைய அன்பை சீஷர்கள் மீது வைத்து அவர்களை செயற்படுத்துவதற்கு ஆயத்தப் படுத்தினார். அந்த அன்பின் ஈர்ப்பானது ஆயிரங்களாக, பதினாயிரங்களாக, இலட்சங்களாக உலகெங்கும் அவரது அன்பின் வேர் விரிந்தது.**

அன்பு என்பது வார்த்தையில் அல்ல வாழ்க்கையில். ஆனாலும் சகோதரர் வாசலில் குறைவுடனும் தேவையுடனும் மனப்போராட்டத் துடனும் நிற்பதைப்பார்த்தும் தம் இதய வாசலை அடைத்துக் கொள்வோம் இந்த அன்பின் தேவனின் ராச்சியத் திற்கு உட்பட்டோர் என கூறுவது ஆச்சரியமாகவுள்ளது. அன்பின் வார்த்தைகள் அழகாக எடுத்து முழங்குவது வியப்பாக உள்ளது. இது போன்று முழக்கங்கள் கோடைகாலத்து இடிகள்.

**நாம் சுமக்க வேண்டியது சிலுவை தான். ஆனால் கொடுக்க வேண்டியதோ தேவ அன்பு. இது தான் இன்றைக்கு மனுக்குலத் திற்கு தேவை.**

---

சரியான விடை எழுதியவர்களில்
பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

**வினாவிடை - 79**

*ஆர்.ஸ்ரேகா – மீசாலை*

**குறுக்கெழுத்துப் போட்டி - 77**

*ம.சிவகௌரி – பாண்டவெட்டை*






# பெற்றோரின் அல்லது உறவின் அடிப்படையிலான இருதயம் கொண்ட ஊழியம்

*(கடந்த இதழின் தொடர்ச்சி...)*

ஒரு இரத்த உறவின் இருதயம் எப்படி இருக்குமோ அதே போன்று ஆண்டவர் எங்களிடம் தந்த ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் ஊழியம் செய்ய வேண்டும். நீங்கள் கவனிக்கிற போது நல்ல நோக்கத்தோடு கவனியுங்கள். விழுத்துகிற நோக்கத்தோ, குழி வெட்டுகிற நோக்கத்தோடு, தள்ளிவிடுகிற நோக்கத்தோடு கவனிக்கக்கூடாது. கவனித்தால் நல்ல நோக்கத்தோடு, ஒரு ஆத்துமாவை வாழ வைக்க வேண்டும் என்று கவனியுங்கள். மோசேயின் தாய்க்கு எவ்வளவு துன்பம் வந்திருக்கும், ஒன்று சொல்லலாம், இந்த தாய்க்கு முழுவதும் துன்பமாகத் தான் இருந்திருக்கும். **யாத்திராகமம் 2:6 அதைத் திறந்தபோது பிள்ளையைக் கண்டாள்: பிள்ளை அழுதது: அவள் அதின்மேல் இரக்கமுற்று, இது எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று என்றாள்.** இப்போது சூழ்நிலை மாறுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் தமக்கை போய் கேட்கிறாள்: **இந்தப் பிள்ளைக்கு பால் கொடுக்கிற ஒரு தாயை கொண்டு வரட்டுமா?** ஒரு ஜீவனைக் காப்பாற்ற படிப்படியாக அணுகுகிறார்கள். இங்கு சிறப்பான அணுகுமுறை இருக்கிறது. இது தந்திரம் அல்ல மாறாக ஒரு ஆத்துமாவை வாழ வைப்பதற்கான படிமுறை அல்லது தேவ சித்தம் நிறைவேறுவதற்கான படிமுறை.

**யாத்திராகமம் 2:7 அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியை நோக்கி: உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் பால்கொடுக்கிற ஒருத்தியை நான் போய் உம்மிடத்தில் அழைத்துக்கொண்டு வரட்டுமா என்றாள்.** அந்த சகோதரியின் எண்ணமெல்லாம் தம்பியைக் காப்பாற்ற வேண்டும், அதனால் அவளுடைய வார்த்தையெல்லாம் அதைச் சுற்றித் தான் வருகிறது. இங்கே முக்கியமாக எதைக் கண்டு கொள்ள முடியும் என்றால்: **அந்த பிள்ளைக்கு உடனடியாக பால் ஊட்டக்கூடிய நிலையிலே அந்த தாய் இருந்தாள்.** பவுல் சொல்கிறார்: "நான் உங்களுக்காய் கற்பவேதனைப்படுகிறேன்". **இரட்சிக்கப்பட்டு**

**எத்தனை வருடம் ஒரு ஆத்துமா கதறுகிறது என்றால் அதற்கு களங்கமில்லாத திருவசனமாகிய ஞானப்பாலை உடனடியாக சிறந்த முறையில் கொடுக்கக்கூடிய பக்குவம் எனக்கும் உங்களுக்கும் இருக்கிறதா?** ஆத்துமா வழி தெரியாமல் அலைகிறது. ஒரு ஆத்துமாவிற்கு தேவை இருக்கிறது. ஒரு ஆத்துமாவின் ஜீவன் போகப்போகிறது. உடனடியாக அந்த ஆத்துமாவிற்கு தேவனுடைய வார்த்தையை சரியாய் சொல்லத் தக்கதாய், தாயின் மார்பையுடைய தேவனின் உண்மையான அன்பை கொடுக்கத்தக்க ஒரு நல்ல இருதயம் எங்களுக்கு இருக்க வேண்டும்.

**அந்த தாய் கற்ப வேதனைப்பட்டு அந்த குழந்தையை பெற்றெடுத்ததின் நிமித்தமாக அவள் ஆயத்தமாய் இருந்தாள்.** நாம் ஒவ்வொருவரும் ஆண்டவருக்குள் கற்ப வேதனைப்பட்டு, ஆத்துமாக்களை தேவ ராச்சியத்திற்குள் சேர்க்க வேண்டும். அவர்களை எப்போதும் எந்த நிலையிலும் பராமரிக்கிற நிலையில் நாம் இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையாகிய களங்கமில்லாத ஞானப்பாலை தேவனை அறிந்து வருகிற மக்களுக்கு கொடுத்து அவர்களை கர்த்தருக்குள் பெலப்படுத்தி தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் பெலவான்களாய் மாற்றும் பொறுப்பு எங்களுடையது. ஒரு போதும் இந்த பொறுப்பில் இருந்து நானும் நீங்களும் தவறக்கூடாது. தவறினால் எத்தனையோ மோசேக்களை நாங்கள் இழந்துவிடுவோம். அத்துடன் தேவனுடைய சித்தம் நிறைவேறுவதற்கு நாங்கள் தடைகளாய் மாறிவிடுவோம். பாவ அடிமைத்தனத்தி லிருந்து வெளியே ஆத்துமாக்களை கொண்டு வருகிற ஊழியம் தடைபட்டுவிடும். **எங்களுக்கு கொடுக்கப்பட்ட விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொடுத்து, வார்த்தையினால் தேற்றி பராமரித்து அவர்களை பூரண புருஷராக்குகின்ற நிலைக்கு அவர்களைக் கொண்டு வரவேண்டும்.**

இந்தத் தாயைக் குறித்து ஒரு காரியத்தை பார்க்க முடியும்: **இந்த தாய் தான் பெற்ற பிள்ளையை பராமரிக்கிற போது வேலைக்காரியாக இருந்து பராமரித்தாள்.** மோசேக்கு உண்மையான தாய் ஆனால் பார்வோனின் குமாரத்திக்கு வேலைக்காரி மோசேயின் தாய்க்கு தாங்க முடியாத துக்கம் தான், அந்த துக்கத்தை எப்படி ஆற்றினாள் என்றால் வேலைக்காரி என்ற நிலையில் தன்னுடைய பிள்ளைக்கு ஊழியம் செய்தாள். அவளுடைய ஏக்கம் விருப்பம் எல்லாம் தன்னுடைய குழந்தை மரிக்கக்கூடாது அதை செய்வதற்காய் ஒரு படி இறங்க வேண்டி இருந்தது. **பெற்ற தாயே இறக்க வேண்டி இருக்கிறது இது வேதனையாய் இருக்காது, என்னுடைய குழந்தையை நானே பராமரிக்கிறேன் என்று சந்தோஷமாய் இருந்திருக்கும்.** ஊழியம் செய்கிற எனக்கும் உங்களுக்கும் பலவேதனை, தாங்க முடியாத துன்பங்கள் எல்லாம் வரலாம். ஆனால் நீங்கள் உண்மையான பெற்றோருடைய இருதயம் உடையவர்களாய் எங்களைத் தாழ்த்துகிற போது வேதனையெல்லாம் சந்தோஷமாக மாறும். **உங்களுடைய வாழ்க்கையில், ஊழியத்தில் கண்டிப்பாக வேதனை வரும். உங்களுக்கு இல்லாதது சொல்லப்படும். அதன் மத்தியில் உங்களைத் தேற்ற வேண்டும் என்றால் சொல்வதெல்லாம் சொல்லட்டும் என்று ஒரு படி இறங்குகிற போது நாங்கள் கர்த்தருக்குள் கொடுக்கிற ஊழியத்தை நிறைவேற்றி முடிப்போம்.**

பேசுகிறவர்கள் பேசட்டும் கர்த்தர் எங்களுடைய கையில் தந்த ஆத்துமாக்களை நன்றாக கவனிப்போம். மோசேயின் தாய் தான் கற்ப வேதனைப்பட்டு பெற்ற தன்னுடைய பிள்ளையை நன்றாய் கவனித்தாள். பிள்ளை அழுகிற நேரத்தில் எல்லாம் பால் ஊட்டியிருப்பாள். வேலைக்காரியின் உருவம் தான் ஆனால் பிள்ளையை ஜீவனோடு காத்து, பராமரித்தாள். தேவசித்தம் நிறைவேற வளர்த்தாள். உண்மையில் அது அவளுக்கு இருந்த துக்கத்தை ஆற்றிவிட்டது.

லூக்கா 15ஆம் அதிகாரத்தில் பார்த்தால் வீட்டை விட்டு போன மகன் எப்போது திரும்பி வருவான் என்று தகப்பன் பார்த்துக் கொண்டேயிருந்தார். இதிலும் தகப்பனுக்கு எவ்வளவு வேதனை இருக்கும் என்று ஊகிக்க முடியும். **இதிலே தகப்பனுக்கு இருந்த துன்பம் எப்படி மாறியது என்றால் மகன் வந்த போது அவனை அணைத்து ஏற்றுக் கொண்டதால், இன்னொருவிதத்தில் பார்த்தால் ஒரு ஆத்துமா நிமித்தமாய், மகன் நிமித்தமாய் தன்னை தாழ்த்தி ஒரு படி கீழே இறங்குகிறார்.** நாங்கள் எங்களுக்கு கீழாய் கொடுக்கப்பட்ட எந்த ஆத்துமாவும் தேவனை, சபையைவிட்டு போகாதபடிக்கு முழு முயற்சி எடுக்க வேண்டும். தேவனுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட்டு, சம்பாதிக்கப்பட்டவர்கள். விசுவாசிகள் உபதேச பிழை செய்து தேவனுடைய சபைக்கு விரோதமாய் செயற்பட்டால் ஒன்றும் செய்ய முடியாது. தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் செயலாற்றி, தேவையற்ற ஆசீர்வாதங்களை கண்டு நாங்கள் போகப்போகிறோம் என்று கூறினால் அதற்கு நாங்கள் எதுவும் செய்ய முடியாது. நன்மை செய்த தேவனை தூற்றி வெறுத்து செல்கிற மக்களும் இருக்கிறார்கள். **ஆனால் எங்கள் மீது இருக்கிற குறைவினால் ஒரு ஆத்துமா போகுமென்றால் அதினுடைய இரத்தப்பழிக்கு நாம் தான் பொறுப்பு.** அவர்கள் தாங்களாய் போனால் பிரச்சினை இல்லை. ஆனால் எங்கள் மீது குற்றத்தை வைத்து அந்த குற்றம் உண்மையாக இருக்குமென்றால் அதற்குரிய பழி எங்களைத்தான் சாரும்.

ஒரு ஆத்துமா கெட்டுக்போகாமல் காக்க வேண்டியது எங்களுடைய பொறுப்பு. **அதற்காக ஒரு படி இறங்க வேண்டும் என்றாலும் இறங்கத்தான் வேண்டும்.** சில விசுவாசிகள் தங்கள் வாய்க்கு வந்ததெல்லாம் கதைப்பார்கள். ஒரு இடத்தில் *நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை ஆனால் நாங்கள் ஏதாவது தவறுவிட்டிருந்தால், உங்கள் மனம் நோக நடந்திருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள் என்று ஒரு படி இறங்கி மன்னிப்பு கேட்டோம். ஆனால் அதற்கு அவர்கள் பேசிய வார்த்தைகளைச் சொல்ல முடியாது. பிழை செய்யாவிட்டாலும் மன்னிப்பு கேட்டோம்.* எங்களுடைய பக்கத்தில் எப்போதும் நாம் சரியாக இருக்க வேண்டும். எவ்வளவுக்கு இறங்க முடியுமோ அந்தளவுக்கு இறங்கி ஆத்துமாக்களை கட்டப்பார்க்க வேண்டும். ***இந்த தகப்பனுடைய வேதனை மன்னிப்பு கொடுப்பதன் மூலம் நீங்கியது.*** இந்த மகன் போகும் போது ஆஸ்திகளுடன் சென்றான், ஆனால் திரும்பி வரும் போது அவை எல்லாவற்றையும் அழித்து ஒன்றும் இல்லாமல் வருகின்றான். அது இழப்பு, வீட்டிற்கு கெட்ட பெயர் எல்லாம் வந்தது என்றாலும் ஒரு ஆத்துமா மீது கொண்ட கரிசனையை தகப்பன் வெளிப்படுத்தினார்.

ஆத்துமாக்கள் வந்தால் வரட்டும் வராவிட்டால் வராமல் விடட்டும் என்று தயவு செய்து கூறாதீர்கள். அப்படி கூறினால் நிச்சயம் ஒரு நாள் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். ஒரு குழந்தைக்காய் தாயும் தமக்கையும் ஊழியம் செய்தார்கள். தூரத்தில் போன மகன் உணர்வடைந்து வருகிற போது ஒருபடி இறங்கி அவனை மன்னித்து ஏற்று சிறப்பான ஊழியம் செய்தார்.

*சிலர் என்னிடம் வந்து ஒருவருடைய பெயரைக் கூறி அவர் உங்களைக் குறித்து இவ்வாறெல்லாம் தவறாக பேசினார் என்றார்கள். சொற்ப நாட்களின் பின் வேறொரு நபர் என்னிடம் வந்து அதே நபர் உங்களைக் குறித்து தவறாக பேசினார் என்றார்கள். எம்முடைய சபையைச் சார்ந்த வர்கள் மட்டுமல்ல வேறு திருச்சபையைச் சார்ந்த சிலர் அந் நபர் என்னைக் குறித்து தவறாக பேசுவதைக் குறித்து எனக்கு தெரிவித்தார்கள். எனது பெருமைக்காக நான் இதனைக் கூறவில்லை. நான் யோசித்தேன், நான் ஆண்டவரால் அழைக்கப்பட்டிருக்கிறேன், என்னுடைய இருதயம் பெற்றோரின் இருதயத்தைப் போன்று இருக்க வேண்டும். ஆகவே இது வரைக்கும் நான் ஆண்டவருடைய கிருபையால் அந்த நபரைக் கண்டால் வழமையாக பார்ப்பது போன்றே பார்ப்பேன், சிரிப்பேன். இன்னும் எத்தனை பேர் அந்த நபரைக் குறித்து என்னிடம் வந்து கூறுவார்களோ தெரியாது. ஆனால் ஒரு நாள் ஆண்டவர் அவரிடம் அதைக் குறித்து கேட்கும் போது அவர் அதற்கு கணக்கு கொடுக்க வேண்டும்.* ஒருவேளை உங்களைவிட வயதில் சிறியவர்களாக இருக்கலாம், அல்லது வயது கூடியவர்களாக இருக்கலாம். ஊழியர்களாக இருக்கலாம் விசுவாசிகளாக இருக்கலாம். அவர்கள் உங்களுக்கு தாக்கத்தை உண்டுபண்ணினால் பொறுமையாக இருங்கள். கர்த்தர் அதற்கு பதில் கொடுப்பார். நாங்களும் அவர்களைப் போன்று மாறக்கூடாது.

உங்களுக்குரிய தகப்பனுடைய இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சகலவற்றையும் பரம தகப்பனிடம் ஒப்புக்கொடுங்கள். அவர் சரியாய் உங்களுக்காய் யுத்தம் பண்ணுவார். நீங்கள் பெற்றோராய் உங்கள் பிள்ளைகளுக்காய் எத்தனையோ ஆசீர்வாதங்களை இழந்திருக்கலாம். அதே போன்று எங்களுடைய ஆவிக்குரிய பிள்ளைகளுக்காய் நாங்கள் இழக்க வேண்டும். வருகிற துன்பங்கள், வேதனைகளை மாற்றுவதற்காய் சிலவற்றை நாங்கள் இழக்க வேண்டும். எங்களுடைய ஸ்தானத்தை இழக்க வேண்டும். எங்களுடைய நிலையை தளர்த்த வேண்டும். ஆத்துமாக்களை தேவராச்சியத்திற்குள் சேர்ப்பதற்காய் முயற்சி பண்ண வேண்டும். தாய் தகப்பனின் இருதயம் உங்களிடம் இருப்பதை மக்கள் கண்டால் உங்களிடம் வந்து தங்களுடைய பாரத்தைச் சொல்வார்கள். அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்படியாக ஜெபத்திலே காத்திருக்க வேண்டும். நிச்சயமாய் தேவனுடைய விருப்பம் நிறைவேற்றுவதாய் உங்களுடைய ஊழியம் அமையும்.

*முற்றும்.*



# நன்றியுள்ளவர்களாய் இருங்கள்!

ஜசிந்தா அக்கா




தாய்ப் பன்றி ஒன்றும் அதன் குட்டிகளும் வாழ்ந்து வந்தன. அம்மாவிடம் பாலைக் குடித்து வளர்ந்த குட்டிகள் எல்லாம் நன்றாக கொழுத்து இருந்தன. கொழுத்த குட்டிகளுக்கு பட்டணம் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் வந்தது. அப்படியே அம்மாவிடம் "அம்மா நாங்கள் பட்டணம் பார்க்கப் போகி றோம்" என்று கேட்டனர். ஐ...ஐயோ பட்டணத்தில் மனிதர்கள் தான் நடமாடுவார்கள். நீங்கள் போனால் சிலவேளை உங்களை அடித்து துரத்துவார்கள் என்று அம்மா பன்றி எச்சரித்தது. கீழ்ப்படியாத குட்டிகளெல்லாம் பட்டணம் பார்க்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்கள். சரி குட்டிகளே சென்று வாருங்கள் என்று அம்மா சொல்லி வீதியில் ஓரமாகச் செல்ல வேண்டும். சாக்கடைத் தண்ணீரில் விழுந்து கிடக்கக்கூடாது. கடைகளுக்குளே போகக்கூடாது, கவனமாய் போய்வாருங்கள் என்று அம்மா சொல்லி அனுப்பிவிட்டா.

அனுமதி கிடைத்ததும் பன்றிக்குட்டிகள் தள்ளிக்குதித்து மிகவும் சந்தோஷப்பட்டனர். அன்பாக அம்மாவுக்கு Bye (பாஃய்) சொல்லிப் புறப்பட்டனர். தங்கள் குட்டி வால்களையும் அசைத்துக் கொண்டு குட்டிக் கால்களால் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தன. போகும் வழியில், மனிதர்கள் எப்படி சைக்கிள் ஓட்டிக் கொண்டு வருகிறார்கள் என்று பார்த்தாயா தம்பி? ஆம் அண்ணா, அதென்ன பெரிய சத்தமாக ஓட்டிக் கொண்டு வருகிறார். எனக்குப் பயமாக இருக்கு. பயப்படாதே அது தான் மோட்டார் சைக்கிள். தங்கச்சி ஏன் மெதுவா நடக்கிறா? அண்ணா எனக்கு கால் வலிக்குது, நான் அப்பவும் சொன்னேன், நீ நடக்கமாட்டாய் என்று. நீ பிடிவாதமாய் நின்று வந்தாயே, இப்ப நட, சரி நடக்கிறேன். என்ன அண்ணா ஒரே ஜனக்கூட்டமாய் இருக்கே. அது ஜனங்கள்

போக்குவரத்துச் செய்யும் புகையிரதம் வரப்போகிறது. அங்கே பார் சிவப்பு லைட் எரிகிறது. அதைக் கண்டால் ஜனங்கள் நிற்க வேண்டும். ஆ! அழகான சிவப்பு லைட். பார் கேற்றும் (Gate) பூட்டியாச்சு. அது மனுஷர்களுக்குத் தானே தடை. நாங்கள் வீதி ஓரமாகப் போகலாம் அண்ணா. இல்லை இல்லை மனுஷரும் வாகனங்களும் எங்களை நசுக்கிப் போடும். கொஞ்சம் பொறு இப்பொழுது புகையிரதம் வரும். தூரத்தில் சத்தம் கேட்கிறது. கட.. கட.... சுக்குப்பக்கு, சுக்குப்பக்கு கூ.... கூ... சுக்குப்பக்கு, சுக்குப்பக்கு கூ.... அப்பாடா எவ்வளவு பெரிய புகையிரதம். சரி புகையிரதமும் பார்த்துவிட்டோம். அண்ணா இப்ப எங்களுக்குப் பசிக்கிறது... களைத்துப் போனோம். வாருங்கள் இந்தக் கடைக்குள் போய் சாப்பாடு கேட்போம். உள்ளே போகும் போதே "ச்சு, ச்சு ஓடு எங்கிருந்து வந்த பன்றிக் கூட்டங்களோ? ஓடு" என்று கலைக்கும் சத்தம் கேட்டு பசியோடும் துக்கத்தோடும் பன்றிக் குட்டிகள் கடையைவிட்டு வெளியேறின. இரக்கமில்லாத மனுஷன் அண்ணா. நல்ல வேளை தப்பிவிட்டோம். வாருங்கள் நாம் இன்னுமொரு கடைக்குப் போவோம்.

தம்பி அந்தக் கடைக்குப் பின்பக்கத்தில் மரக்கறிகள் வெட்டி எறிந்து கிடக்கிறது. வாருங்கள் நாங்கள் மூன்று பேரும் போய் சாப்பிடுவோம். சாப்பிடும் போது கடை முதலாளி வந்து பார்த்து இன்னும் சில கிழங்கு களையும் கொண்டு வந்து போட்டுவிட்டார். அப்பாடா நாங்கள் வயிறார சாப்பிட்டம் அண்ணா. எங்களுக்கு கிழங்குகளைத் தந்தவர் இயேசப்பாவின் பிள்ளை போல் இருக்கிறது. ஆம் தம்பி நானும் அப்படித் தான் நினைக்கிறேன்.


வாங்க போகலாம். தம்பி பார்த்தாயா கட்டடங்களை? இம் பெரிய கட்டடம் அக்கா எல்லாவற்றையும் பார்க்க ஆசையாக இருக்கு. மனுஷர்கள் எல்லாம் விதம் விதமாக உடுத்துக் கொண்டெல்லாம் போகிறார்கள். ஆம் தம்பி எனக்கும் மனுஷர்களைப் போல வரவேண்டும் என்று மிகவும் ஆசையாக இருக்கிறது. வாங்க வீட்டுக்குப் போய் அம்மாவிற்குச் சொல்லுவோம். பட்டணம் பார்த்த பன்றிக் குட்டிகள் எல்லாம் வீட்டிற்கு வீறுநடை போட்டார்கள்.

என்ர செல்லக் குட்டிகளே, பட்டணம் பார்த்தீர்களா? ஆம் அம்மா எல்லாம் சுற்றிப் பார்த்தோம். எல்லாமே அழகாக இருக்கிறது. மனுஷர்களைப் பார்க்க அதிக ஆசையாக இருக்கிறது. அம்மா.. ஆ! அப்படியா? அம்மா இப்ப எங்களுக்கு ஒரு ஆசை...! என்ன ஆசை? "நாங்களும் மனுஷர்கள் போல ஆகவேண்டும் அம்மா" "சீ... நன்றி கெட்ட பன்றிக் குட்டிகளே, என்ர பாலைக் குடித்துவிட்டு மனுஷர் களைப் போல வரவேண்டும் என்று விரும்புகிறீர்களே உங்களுக்குத் தெரியுமா மனுஷர்கள் எல்லாம் எங்களைப் போல ஆகிக் கொண்டிருக்கிறார்கள்" என்றது.

இயேசப்பாவின் செல்லப் பிள்ளைகளே. தாய் பன்றி தனது பாலைக் குடிக்கும் தனது குட்டிகள் எல்லாம் தன்னைப் போலவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறதைப் பாருங்கள். ஆனால் குட்டிகளோ மனுஷரைப் போல வர விரும்பு கிறார்கள். இதே போலத்தான் தேவனுடைய வேத வசனமாகிய கலங்கமில்லாத ஞானப்பாலை உட்கொள்கிற நீங்கள் இயேசப்பாவிற்கு விருப்பம் இல்லாதவற்றை செய்தால் நீங்களும் நன்றியில்லாத பிள்ளைகளாகவே இருப்பீர்கள். **"நன்றியறிதல் உள்ளவர்களாயிருங்கள்" என்று வேதாகமத்தில் கொலோசெயர் 3:15**இல் எழுதப்பட்டி ருக்கிறது. இயேசு சுவாமி நீங்கள் செய்த எல்லாப் பாவங்களுக்காகவும் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டார். மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தவர் பரலோகத்தில் இருக்கிறார். அங்கு ஒரு மகிழ்ச்சியான இடத்தை உங்களுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிறார். அதற்காக நீங்கள் இயேசப்பாவிற்கு நன்றியாக இருக்க வேண்டும். பன்றிக் குட்டிகளைப் போல் விரும்பாமல் இயேசப்பாவைப் போல வர விரும்புங்கள்.

நீங்கள் சிறுபிள்ளைகளாக இருக்கும் போது வியாதி வந்த நேரங்களில் உங்கள் அம்மா, அப்பா தாங்கள் நித்திரை கொள்ளாமல் கண் விழித்து, உங்களை பராமரித்திருக்கிறார்கள் அல்லவா? இப்பொழுதும் தங்களைத் தியாகம் பண்ணுகிறார்கள் அல்லவா? பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு நன்றியாய் இருக்கிறீர்களா? பன்றியைப் போல மாறவேண்டாம். பன்றிக்குப் பரலோகம் இல்லை. இயேசப்பாவின் பிள்ளைகளுக்குத் தான் பரலோகம். ஆகவே அவருக்குப் பிரியமாக நன்றியுள்ள பிள்ளைகளாக வாழுங்கள்.

**திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். 1பேதுரு 2:3**



# குறுக்கெழுத்துப் போட்டி - 77

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. ஆகாஸ்வேரு (எஸ்தர் 7:7)
05. கிதியோனின் (நியா 8:35)
08. ஊரி (1நாளா 1:5)
11. காருணியம் (சங்கீதம் 5:15)

**வலமிருந்து இடமாக**

06. மக்னாயீம் (ஆதி 32:2)
07. நிம்ரோத் (நியா 8:35)
10. பாஷா (11நாளா 10:1)
12. சாலமோனால் (1இரா 2:25)
14. ஆரோனுடைய (எண் 17:3)

**மேலிருந்து கீழாக**

01. திகிலாத்பிலேசர் (11இரா 15:27)
03. மேவிபோசேத் (11சாமு 4:4)
04. ராமதாயீம் (1சாமு 1:1)

**கீழிருந்து மேலாக**

09. ஆகாக் (1சாமு 15:32)
13. நாகாஸ் (11சாமு 10:2)
15. கூஷான்ரிஷதாயீம் (நியா 3:10)




## ஆன் ஜட்சன்
## 1789 - 1826



### பெண் நினைத்தால்...

பெண்கள் போற்றப்பட்டார்கள் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஏட்டளவில் இது உண்மை. ஆனால் செயற்பாட்டிலோ சுத்தப் பொய். பெண்கள் பிற ஆண்டகளைப் பார்த்துவிடக் கூடாது என்று வீட்டில் அடைத்து வைக்கப்பட்டனர். பெண் கல்வி மறுக்கப்பட்டது. கணவர் இறந்தால், பெண்ணும் சிதையோடு தள்ளப்பட்டாள். கொடூரமான பல செயல்கள் பெண்கள் மீது திணிக்கப்பட்டன.

இந்நிலைகளை மாற்ற கிறிஸ்துவின் அடியார்கள், தங்களை அர்ப்பணித்து துரிதமாக செயல்பட்டனர். எனவே பெண்கள் இன்று தலைநிமிர்ந்து வாழ்வதோடு, பல துறைகளில் முன்னேற்றமும் கண்டுள்ளனர்.

ஆன் ஜட்சன் இவர் அதோணிராம் ஜட்சன் என்பவரின் மனைவியாவார். பெண் மிஷனெரிகளில் முதன் முதலில் கடல் கடந்து மிஷனெரி பணி செய்தவர்களில் முதன்மையானவர் இவர். 1812ஆம் ஆண்டு, தன் கணவர் அதோணிராம் ஜட்சனுடன் கல்கத்தா வந்து சேர்ந்தார். ஆனால், அங்கு எதிர்பாராத சம்பவங்கள் ஏற்படவே, இந்தியாவை விட்டுப்புறப்பட்டார்.

1813ஆம் ஆண்டு, பர்மாவுக்கு பயணம் செய்தார். பர்மீயர்களின் வாழ்க்கை முறை இவரைப் பெரிதும் கவர்ந்தது. அவர்களின் மொழியை மிகுந்த கவனத்துடனும், ஆர்வமுடனும் கற்றறிந்தார். வேதாகமத்தை அவர்களின் மொழிகளில் கொடுத்துவிட வேண்டும் என்ற துடிப்பு இவர் உள்ளத்தில்

காணப்பட்டது. எனவே, வேதாகமத்தை மொழிபெயர்ப்பதில் தன் கவனத்தை செலுத்தினார்.

பர்மீய பெண் குழந்தைகளுக்குக் கல்வியைக் கற்றுக் கொடுத்து, அத்துடன் வேதாகமத்தின் சத்தியங்களையும் அவர்கள் புரிந்து கொள்ளுமாறு எடுத்துரைத் தார். வேதாகமம் அவர்கள் தாய் மொழியில் வெளிவந்தது.

மிஷனெரி பணியினிமித்தம் 18 மாத சிறைத்தண்டனை பெற்ற அதோனிராம் ஜட்சனுக்குப் பெரும் உதவியாகவும் பக்க பலமாகவும் ஆதரவாக வும் செயற்பட்டு, ஆண்டவரின் பணியை அயல்நாடாகிய பர்மாவில் சிறப்புடன் செய்தார்.

**அன்பரே! ஆன் ஜன்சனைப் போன்ற துடிப்பு உங்களிடம் உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஒவ்வொரு சோதனையும் நாம் தேவன் அருகில் மேலும் நெருங்கிச் சேரும் சந்தர்ப்பங்கள் — ஜான் குயின்லி**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" அக்டோபர் 01**



## வீர சூரியா

-

## *இதயத்தைக் கவரும் சிலுவை*

இரு வேலையாட்களுக்கு இடையே சண்டை ஏற்பட்டது. நீ பெரியவனா? நான் பெரியவனா? என்ற சண்டை அது. இறுதியில் இவ் வழக்கு வீர சூரியாவிடம் வந்தது.

150 ஐரோப்பியருக்கும், 150 இந்தியருக்கும் தலைவரான இவர் இவ் வேலையாட்களின் சண்டைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும், இதைப் போன்ற சிந்தனை உள்ளவர்களின் செயலுக்குச் சரியான தீர்வு காண்பிக்கவும் தீர்மானித்தார்.

வேலையாட்கள் இருவரையும் அழைத்தார். அவர்களை உட்காரவைத்து, அவர்களின் கால்களை கழுவ ஆரம்பித்தார். அவர்கள் வேண்டவே வேண்டாம் என்று தடுத்த போது, "உங்கள் கால்களை நான் கழுவாவிட்டால் என்னோடு உங்களுக்கு பங்கில்லை" என்று அவர் சொல்ல அவர்களின் மனம் மெழுகு போல உருகியது. கண்ணீரோடு அவர்கள் தங்கள் பாவத்தை உணர்ந்து, பெரியவர் சிறியவர் என்ற சண்டையை மறந்து சகோதரராயினர்.

வீர சூரியா இலங்கையில் ஒரு புத்த குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதில் ஒரு ஆலய ஆராதனையில் கலந்து கொண்ட போது, கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர். அப்போது அவருக்கு வயது 24. தன் இருதயத்தில் நிறைந்த இயேசுவை, தன் நண்பர்களுக்கு அறிவிக்கத் தொடங்கினார். அநேகர் இவர் மூலம் இரட்சிக்கப்பட்டனர். இரசண்ய சேனை இயக்கத்தில் உறுப்பினராக இணைந்த இவர், அன்பையே ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்துவைப் போல் வாழ்ந்து காட்டினார்.


புத்த வாலிபர்கள் சிலர் இவர் மேல் எரிச்சலுற்று, இவரை கொல்ல வகை தேடினர். இதையறிந்த இவர், அவர்களைத் தனியே ஒரு காட்டிற்கு வரவழைத்தார். தான் கையில் எடுத்துச் சென்ற கயிற்றை அவர்களிடம் கொடுத்து, ஒரு மரத்தில் கட்டச் செய்தார். பின்னர் கத்தியை அவர்களிடம் கொடுத்து, தன்னை அவர்கள் விருப்பத்திற்கு தன்னை வெட்டச் சொன்னார். அவர்களோ தங்களின் தவறை உணர்ந்து, இவரிடம் மன்னிப்பு கேட்டனர். இவரின் வாழ்வு முறையினால் கவரப்பட்ட அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். இவர் 30 வயதிற்குள் அநேகரை இரட்சிப்புக்குள் நடத்தி, இறைவனின் மார்பில் சாய்ந்தார்.

**அன்பரே! கிறிஸ்தவர்களின் முன்மாதிரிகளாக வாழ நீங்கள் தயாரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: என்னைவிட இயேசுவை சிநேகிக்கிறவர்கள் உண்டானால், அவர்கள் பாதம் நான் தேடி, உட்கார்ந்து படிப்பேன். — வீர சூரியா.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டம்பர் 08**

# வினாவிடை - 79




01. அத்திமரம் - நியாயாதிபதிகள் 9:11

02. பார்வோன் - நெகேமியா 9:10

03. முப்பது பேர் - 1சாமுவேல் 9:22

04. நீதிமான்களின் - நீதிமொழிகள் 15:19

05. கர்த்தருடைய விருட்சங்களும், அவர் நாட்டின கேதுரு மரங்களும் - சங்கீதம் 104:16


06. ஆகார் - ஆதியாகமம் 21:19

07. சாலொமோன் - பிரசங்கி 2:5

08. தாவீது - சங்கீதம் 142:3

09. ஐசுவரியவான் - லூக்கா 12:18

10. சகரியா 8:5



# குறுக்கெழுத்துப் போட்டி - 78

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 01 | | | 02 | ◆ | | 03 |
| ◆ | | 04 | | | ◆ | | |
| | | ◆ | | | | 05 | |
| | ◆ | 06 | | | ◆ | | |
| | | | | 08 | ◆ | 07 | ◆ |
| | 09 | | | ◆ | 10 | | |
| | ◆ | ◆ | | | | | 11 |
| 12 | | | | | | ◆ | 13 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- நன்றி -

## இடமிருந்து வலமாக

04. 12வயதில் இவன் ராஜாவானான்
06. எலியாப் என்பவனின் இன்னொரு பெயர்
09. கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்டவன்
10. ஐந்து முழ உயரமான எகிப்தியனின் கையிலிருந்து ஈட்டியைப் பறித்தவன்
12. "மெல்கிசேதேக்கு" என்பதற்கு அர்த்தம்

## வலமிருந்து இடமாக

02. இவன் இரண்டு பொதியின் நடுவே படுத்துக் கொண்டிருக்கிற பலத்த கழுதை
05. "அகோலாள்" என்பதன் அர்த்தம்
08. தன் கோலின் நுனியினாலே கொஞ்சம் தேன் எடுத்து ருசி பார்த்தவன்
11. நீதிமானுடைய ...... ஜீவனையும், துன்மார்க்கனுடைய விளைவோ பாவத்தை பிறப்பிக்கும்

## மேலிருந்து கீழாக

01. யூதா கோத்திரத்திலிருந்து கானானை சுற்றிப்பார்க்கப் போனது
03. இவன் கூர் மலையின் மேல் ஏறுகிற வழியிலே வெட்டப்பட்டான்

## கீழிருந்து மேலாக

07. இவன் தலை மரத்தில் மாட்டினதால் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினவன்
12. .................. தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்
13. ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய மதில் இடிந்து போகும் என்று கூறியவன்



# வினா விடை - 80

*01.* தேவனும் என்னைக் கைவிட்டார் என்றவன் யார்?

*02.* எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு என வாசிப்பதெங்கே?

*03.* எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள் என்றவன் யார்?

*04.* ஏழு பிள்ளைகளைப் பெற்றவள் களைத்துப் போகிறாள் என சொல்லப்பட்டதெங்கே?

*05.* நீதிமான் கைவிடப்பட்டதை நான் காணவில்லை என்றது யார்?

*06.* தூங்குகிறவனும் உறங்குகிறவனும் இல்லை என வாசிப்பதெங்கே?

*07.* ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார் என்றது யார்?

*08.* ஆபிரகாமுக்கு எத்தனை குமாரர்?

*09.* நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன் என வாசிப்பதெங்கே?

*10.* ஆரோனுக்கு எத்தனை குமாரர் இருந்தார்கள்?

---

**காரைநகர்**

01. பா.கோமதி *
02. நா.கிறிஸ்தீனா
03. நா.அன்னாள்
04. நா.கிருஷன்
05. நா.கிறிஸ்ரீன்
06. பா.அனுகரன்
07. வி.அனுராதா
08. பா.அனுசியா
09. லோ.வதனி *
10. பா.மோகனதாஸ் *
11. ம.மதுஷன் டேவிற் *
12. பா.தர்சினி *
13. அ.தெபோரா *
14. அ.எஸ்தர் *
15. அ.கிருசாந்தன் *
16. அ.துர்க்கா *
17. து.யோகேஸ்வரி *
18. அ.கம்சிகா *

**பாண்டவெட்டை**

19. சி.ரதீஸ்வரி *
20. வ.ஜெயாழினி *
21. வ.ஜோகனன் *
22. வ.கெற்சியாள் *
23. வ.தயாழினி *
24. செ.டிசேந்தன் *
25. செ.எமீமாள் *
26. செ.நகுலா *
27. ம.சிவகௌரி
28. ம.நிம்சிகா
29. க.பிரியதர்சினி
30. எம்.ஜெசிந்தா
31. க.இராஜேஸ்வரி
32. எ.துவாரகன்

**ஊர்காவற்றுறை**

33. வி.நிதர்சன்
34. க.விக்கினேஸ்வரன்
35. க.றெஜீவன்
36. வி.நிதர்சனா

**நாவற்குழி**

37. சூ.ஜான்சி *

**மீசாலை**

38. ஆர்.சுரேகா

**கனடா**

39. குகன் குடும்பம் •

**திருநெல்வேலி**

40. செல்வன்

• குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

*சரியான விடை எழுதியவர்கள்*

**குறுக்கெழுத்துப் போட்டி —77, வினா விடை —79**



# அனலின் ஆன்மீக விருந்து

போதகர் வே.மகாராஜா

## பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களின் சாட்சி வாழ்வு!

பரிசுத்த ஆவியானவர் ஒருவருக்குள் வரும் போது வெளிப் படையான அடையாளங்களுடன் வருவார்: ஆனால் தேவனுடைய ஆவியானவர் ஒருவரை விட்டுச் செல்கின்ற போது அமைதியாக சென்று விடுவார் என்பது பொதுவான கருத்தும் நாங்கள் அறிந்திருக்கின்ற சத்தியமுமாகும். நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட நேரத்தை நினைக்கின்ற போது, ஆண்டவரை புகழ்ந்து, கர்த்தருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து, அந்நிய பாஷையில் பேசி அந்நேரத்தில் சந்தோஷத்தில் நிறைந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதை மற்றவர்கள் கண்டு கொண்டிருப்பார்கள். ஆனால் தேவ ஆவியானவர் ஒருவரை விட்டு செல்கின்ற போது யாருக்குமே தெரியாது. அவர் மெதுவாக சென்றுவிடுவார். அசுத்த ஆவி ஒரு மனிதனை பிடிக்கிற போது எந்த சத்தமும் சந்தடியும் இல்லாமல் பிடிப்பான். ஆனால் அவன் ஒரு மனிதனை விட்டு செல்கின்ற போது அவர்களை அலைக்கழித்து, துன்பப்படுத்தி பெரிய சத்தத்தோடு சென்றுவிடுவான்.

**அபிஷேகம் என்றால்; தேவ ஆவியானவருக்குள் மூழ்குதல்/ தேவ ஆவியானவரின் நிறைவுக்குள் வருதல் என அர்த்தப்படும்.**

ஆகவே இந்த நாட்களில் தேவ ஆவியானவரை பெற்றுக் கொள்வதும், அந்த தேவ ஆவியானவரை எங்களுக்குள் காத்துக் கொள்வதும் மிக அவசியமுமான காரியமாகும். இயேசு சொன்னார்: "நான் சென்று தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அனுப்பு வேன்" என்று. இந்தக் கடைசி நாட்களில் நாம் ஒவ்வொருவரும் தேவ ஆவியானவ ரைப் பெற்றுக் கொண்டு தேவ ஆவியான வர் விரும்புகின்ற வண்ணமாய் சாட்சி யுள்ள வாழ்க்கை வாழும்படி அழைக்கப்பட்டிருக் கின்றோம். **அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள் என்றார்.** எனவே தேவ ஆவி யானவர் ஒருவரை நிரப்புகின்ற போது அந்த மனிதனுடைய நோக்கம் எதுவாக இருக்குமென்றால்: **"என்னைப் பாவச் சேற்றிலிருந்து தூக்கி எடுத்து இரட்சித்த தேவனுக்கு நான் சாட்சி" இது தான்.** தேவ ஆவி எங்களுக்குள் வருகின்ற போது எங்களுக்குள் ஏற்படுகின்ற நிலையும், நாங்கள் எப்படி வாழ வேண்டும் என்பதும் தேவனுடைய எதிர்பார்ப்பாகும்.

சகோதரன் வெஸ்லி மக்ஸ்வெல் (இந்தியா) அவர்கள் ஆவியான வரைப் பற்றிய சிறப்பான காரியத்தை காண்பித் தார். தண்ணீருக்குள் கணுக் கால் அளவு செல்கின்ற போது எங்களுடைய மாம்சத் தின் மிகுதி பகுதி தண்ணீருக்கு மேலே தெரியும். முழங்கால் அளவு தண்ணீருக் குள் சென்றாலும் எமது மாம்சத்தின் கிரியைகள் வெளிப்படும். இடுப்பளவு தண்ணீருக்குள் சென்றாலும் மாம்சத்தின் கிரியை வெளிப்படும். ஆனால் நீச்சல் ஆழம் என்பது அந்த நதியின் தண்ணீர் எந்தப் பக்கம் அடித்துச் செல்கின்றதோ அந்தப் பக்கம் தான் மனிதன் செல்வான். முற்றும் முழுவதுமாய் தேவனுடைய ஆவி யின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிற மனுஷன் தேவனுடைய விருப்பம், சித்தம் என்று சொல்லி தேவன் வழிநடத்துகின்ற விதத்தில் தேவனுடைய இதய துடிப்பை அறிந்து தேவன் எதை விரும்புகின்றாரோ அதை நிறைவேற்றி வாழ்வார்.

**அப்போஸ்தலர் 1:8**இல் *காணப் படுகின்ற வார்த்தையிலிருந்து சில காரியங்களை கண்டு கொள்ள முடியும். நாங்கள் எந்த இடத்திலி ருந்தாலும் அந்த சாட்சியைக் காத்துக் கொள்ள வேண்டும். இன் னொரு காரியம் என்னவென்றால்,* இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை யும், தனக்கு தான் சாட்சியாக இருப்பதும் அதற்குள் மறைந்திருக்கிறது. அதாவது நான் எனது சொந்த வாழ்வில் ஆவியான வருக்கு சாட்சியாக இருக்கின்றேனா? என்று ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள். *அதாவது மற்றவர்கள் பாராதபடி நான் என்னுடைய வாழ்வில் தேவனுக்கு சாட்சியாக இருக்கின்றேனா என்று கண்டு கொள்ள வேண்டும். எருசலே மின் சாட்சி என்பது:* **நான் என் னோடு - எனக்குள் இருக்கிற ஆவியான வருக்கு மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியாத வாழ்க்கையின் பகுதிக்குள் இருக்கின்ற காரியங்களில் சாட்சி யாக இருப்பது மிகவும் கஷ்டமான பகுதி.** *தேவ ஆவியின் அபிஷேகத் தைப் பெற்றிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் எப்போதும் உங்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பீர் கள். நான் என்னை அபிஷேகித் திருக்கிற ஆவியானவருக்கு எப்போ தும் சாட்சியுள்ளவனாக இருக்க வேண்டும். பல வேளைகளில் மற்றவர்கள் பார்க்கின்ற போது*

சாட்சியாக இருப்போம், ஆனால் எமக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவருக்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்று நினைப்பது மிகவும் கஷ்டமான காரியம். ஆனால் நாம் இதிலே சாட்சியைக் கடைப்பிடித்து வாழ வேண்டும்.

பொதுவாக பல கிறிஸ்தவர்கள் சாட்சியாக இருப்பது என்பதை தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துவதோடு மட்டும் அடையாளப்படுத்துவர். பலபேர் மத்தியில் ஆவியானவரின் வல்லமையால் ஒரு அற்புதம் செய்வது அல்லது ஒரு மனிதனுக்காக ஜெபிக்கின்ற போது உடனடியாக அவனுக்குள் மாற்றம் வருவது தான் ஆண்டவருக்கு சாட்சி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்: "நான் போவது உங்களுக்கு நல்லது, அப்பொழுது தான் பரிசுத்த ஆவியானவர் வருவார்" என்று இயேசு கூறினார். அவ்வாறே அவர் சென்று பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். எனவே இயேசு கிறிஸ்து எங்களை விட்டு சென்று தான் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார் என்ற கேள்வி எங்களுக்குள் வரலாம். ஆனால் உண்மையில் இயேசு கூறிய அந்த வார்த்தையின் மூலம் அனுப்பிய ஆவியானவர் எங்களிடத்தில் வருகின்ற போது அவர் வந்து இயேசுவினிடத்திலிருந்து எடுத்து எங்களுக்குப் போதிக்கின்றார். அந்த ஆவியான வர் பிதாவின் ஆழங்களை அறிந்தவர் எங்களோடு இருப்பதால் தேவ னோடு இருக்கிற உன்னதமான உறவின் இன்னும் நெருக்கமான நிலைக்குள் எங்களை கொண்டு செல்கிறார்.

இயேசு போய்விட்டார், அவர் கைவிட்டார் என்று இல்லை அவர் சென்றார் தான் ஆனால் "அவர் அனுப்பிய ஆவியானவர் இயேசுவின் இரகசியங்களை எங்களுக்கு சொல்லித் தருகின்றார்." அந்த ஆவியானவர் இயேசு வாழ்ந்த முறைகளை எங்களுக்குள் புகுத்துகின்றார். இயேசுவின் சொரூப லட்சணங்களை எங்களுக்குள்ளே நாட்டுகிறார். இயேசு எங்களுக்கு காண்பித்த முன்மாதிரி நிலையை கைக்கொள்வதற்காக அவருடைய வார்த்தைகளை எங்களுக்குள் போதிக்கிறார். நாம் வழி விலகுகின்ற போது இதுவே வழி இதிலே நடவுங்கள் என்று சத்தியத்தை எங்களுக்குள் விளங்கப் பண்ணுகிறார். பலபேர் மத்தியில் தேவனை மகிமைப்படுத்துவது, கரங்களை வைக்கின்ற போது குணமாகுவது எல்லாம் சாட்சி தான் ஆனால் இவை மட்டும் தான் சாட்சி என்று எங்களுடைய எண்ணம் இருக்கக் கூடாது. இது மட்டும் தான் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் வாழ்கின்ற சாட்சி முறை அல்ல, இதைவிட எங்களுடைய தனிப்பட்ட வாழ்வோடு சம்பந்தப்பட்ட ஏராளமான சாட்சி முறை உண்டு. அப்படிப்பட்ட சாட்சி முறைகளை நாம் காத்துக் கொள்கின்றோமா, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருப்பதால் நாம் தேவ ஆவியானவர் விரும்புகின்ற வண்ணம் ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்கிறோமா, என்று ஆராய்ந்து பார்ப்போம்.

பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் தனக்காக சாட்சியாக நிற்க வேண்டும் என்று இயேசு சொன்னார். சாட்சியாக இருப்பது என்பது அற்புதம் - அடையாளம் செய்வதோடு சம்பந்தப்பட்டிருப்பதும்,

அதைவிட பரிசுத்த ஆவியின் அபிஷே கத்தைப் பெற்றவர்கள் நிந்தையை சகித்தலோடும், பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து சாட்சியாக இருப்பதோடும் சம்பந்தப்பட்டது. அத்துடன் கிறிஸ்துவுக் காக இரத்த சாட்சியாக மரிப்பதற்கும் ஆயத்தமாக இருப்பது. மற்றவர்களுக்காக அழுது பெருமூச்சுவிட்டு விண்ணப்பம் செய்வது. மன உருக்கத்துடன் மக்களை சந்திப்பது இவைகள் எல்லாம் ஆவியான வரை பெற்ற மனிதர்கள் தேவனுக்காக வாழ வேண்டிய சாட்சியின் முறைகள். அன்றாட வாழ்வில் முகம் கொடுக்கிற பிரச்சினைகளை எப்படி அணுகுகின் றோம் என்பதில் கூட பரிசுத்த ஆவியான வரை பெற்றவர்கள் சாட்சியாக இருக்கி றோமா? இல்லையா? என்பதை காணக் கூடியதாக இருக்கும்.

## 01. கட்டுக்களில் இருந்து விடுதலையாகி தேவனுக்காக வாழ்வதற்கு தேவ ஆவியானவரின் அபிஷேகம் தேவை.

தேவனுடைய வசனத்தை அறிந்த விசுவாச மக்களிடம் தெரி யாத பல கட்டுக்கள் உண்டு. **கட்டுக் களில் இருந்து விடுபடுவதற்கு தேவ ஆவியின் அபிஷேகம் வேண்டும். 11கொரிந்தியர் 3:17 கர்த்தரே ஆவியான வர்: கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.** ஆவிக்குரிய ரீதியிலே விடுதலை பெற்ற மனிதர் களாக வாழ்கின்றோம் என்றால் அதற்கு ஒரு அபிஷேகம் வேண்டும். அப்படிப்பட்ட கட்டுக்களில் இருந்து வெளியே வரவில்லை என்றால் நாங்கள் தேவ ஆவியானவரின் சரியான விடுதலையைப் பெற்றுக் கொள்ள வில்லை. தொடுதலை பெற்றிருந் தால் எங்களுடைய உள்ளான வாழ்வில் இருக்கிற கட்டுக்கள் அனைத்தும் அறுக்கப்பட்டிருக்கும்.

நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்ட அந்த சந்தர்ப்பத்திலே அதிகமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருப்பீர்கள். **ஒரு சகோதரி கூறினார்: நான் இயேசுவை ஏற்றுக் கொண்டமையினாலே என் சகோதரன் என்னோடு பேசுவதில்லை. அவர்கள் எனக்கு செய்த உதவிகளையெல்லாம் நிறுத்திவிட்டார்கள். நான் இயேசுவை ஏற்றுக்கொண்டது அவர்களுக்கு அவமானம். நிந்தை என்று நினைத்து என்னை வெறுத்துவிட்டார்கள் என்று.** ஆரம்பத் திலே தேவனை ஏற்றுக் கொள்கின்ற போது பெரிய பாடுகள், அவமானம், நிந்தைகளுக்கு முகம் கொடுத்து வரு வோம். இந்த அனுபவம் உங்களில் அனேகருக்கும் ஏற்பட்டிருக்கலாம். இப்போது உங்களுடைய ஆரம்ப நாட்களை நினைத்துப் பாருங்கள். ஆண்டவரை அறிந்து ஆலயம் வரு கின்ற போது எப்படிப்பட்ட தடை கள் எல்லாம் வந்தது, அந்த நேரத் திலே வந்த துன்பத்திற்கெல்லாம் முகம் கொடுத்தீர்களே! தேவனு டைய வார்த்தையின் தாற்பரியம் புரிந்த போது, இயேசு தான் இரட்சகர் என்று புரிந்த போது எத்தனையோ தடைகளை எல்லாம் உடைத்துக் கொண்டு ஆண்டவரே என்று அவரை நம்பி வந்தீர்கள். ஆனால் இன்றைக்கு எல்லோரிட மும் ஒரு கேள்வி: எத்தனை துன் பங்களுக்கு முகம் கொடுத்து இயேசு விடம் வந்தோம்! இன்றைக்கு இயேசு சொல்கின்ற அத்தனை சத்திய வார்த்தைகளையும் கேட்டு அதற்கு பூரணமாக கீழ்ப்படிகிறோமா?,

ஆண்டவரை ஏற்ற போது எத்தனையோ துன்பங்கள், நெருக் கங்களுக்குள்ளாக சென்றோம். ஆனால் இன்றைக்கு நெருக்கத்தைக் கண்டு பல வேளைகளில் நெருக்கம் வரும் என்று எதிர்பார்த்துக் கூட சத்தியத்தைக் கைக்கொள்ளாமல் விட்டு விடுகிறோம், தேவனுக்காக வாழ வேண்டிய வாழ்க்கையை விட்டுவிடுகிறோம். ஆனால் நீங்கள் ஆண்டவருக்காக சாட்சியாக நிற்க வேண்டும் என்றால், தேவ ஆவி யானவர் உங்களை அபிஷேகித்தி ருக்கிறார் என்றால் இப்படியான கட்டுக்கள் எல்லாம் உடைக்கப் பட்டவர்களாய், தேவனுடைய பூரண சத்தியத்தை நடைமுறைப் படுத்த எதெல்லாம் தடையாக வருகிறதோ அதையெல்லாம் தாண்டியவர்களாய் ஆண்டவருக்கு சாட்சியாக இருக்க வேண்டும்.

இயேசு கூறிய வாழ்க்கை முறையை நீங்கள் வாழாவிட்டால் நான் தேவ ஆவியானவரின் சரியான தொடுதலைப் பெறவில்லை என் பதை புரிந்து கொள்ள வேண்டும். **சிலருடைய கால்கள் இரண்டு தோணி யில் இருக்கிறது. ஒரு கால் சபையில் மற்றைய கால் உலகத்தில். இப்போது அந்த இரண்டு தோணிகளும் புறப்படுகி றது என்றால் என்ன நடைபெறும்? எங்கே இருப்போம்?** ஆண்டவரின் அபிஷேகம் பெற்று சாட்சியாக இருக்க வேண்டும் என்றால் வருகிற நிந்தைகள் - பாடுகளை தாங்கி, சகித்து எங்களுடைய கட்டுக்கள் உடைவதற்காய் தேவ ஆவியான வரின் அபிஷேகத்தைப் பெற்று உறுதியாக நிற்க வேண்டும்.

## 02. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக வரும் காரியங்கள் மத்தியில் நாங்கள் உண்மையாக இருப்பதற்கு அபிஷேகம் வேண்டும்.

**அப்போஸ்தலர் 4:8 அப்பொழுது பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரி களே, இஸ்ரவேலின் மூப்பர்களே,** அன்று அப்போஸ்தலர் செய்து வந்த ஊழியத்தின் நிமித்தம் நடந்த ஒரு எதிர்ப்பின் நேரத்தில் பேதுரு பரிசுத்த ஆவியால் நிறைந்து பிரச்சி னைக்கு முகம் கொடுத்தார். தேவனு டைய பிள்ளைகளாகிய எமக்கு பிரச்சினை வருகின்ற போது எப்படி அதற்கு முகம் கொடுக்கிறோம். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக் கிற போது தேவ ஆவியானவரின் அபிஷேகம் எமக்குத் தேவை, இல்லையென்றால் நாங்கள் ஆண்டவருக்கு சாட்சியாக இருக்க முடியாது. எங்களுடைய வாழ்வில் வந்த எதிர்ப்பின் நேரத்தில் அல்லது பிரச்சினையின் மத்தியில் அதற்கு பதில் அளிக்க முதல் தேவனிடம் விசாரித்தேன் என்று எத்தனை பேரால் சொல்ல முடியும், என்னுடைய பிரச்சினையின் போது சுயத்தினால் பதில் கொடுக்காமல் தேவ ஆவியி னால் பதில் கொடுத்தேன் என்று எத்தனை பேர் சொல்ல முடியும். அப்படி சொல்கிற மக்களும் உண்டு - அவர்களுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பிரச்சினையின் நேரத்தில் தேவ ஆவியானவரின் அபிஷேகத் துடன் முகம் கொடுத்தீர்கள் என் றால் உண்மையில் நீங்கள் தேவனு

டைய சாட்சி. மனிதர் பலவீனம் உள்ள வர்கள் அதனால் தான் தவறுகி றோம் என்று பலர் சொல்வோம். எங்களுக்கு கோபம் வந்தால் பேச வேண்டியதையெல்லாம் பேசி, சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லி முடிந்த பிற்பாடு தான் ஆண்டவரைக் குறித்து சிந்திப் போம். சிலவேளை நானும் கூட கோபம் வந்தால் கதைத்து விடு வேன், ஆனால் சொற்ப நேரத்தின் பின் தான் சிந்திப்பேன், ஆண்டவருக் காக நான் சாட்சியாக நிற்கவில் லையே என்று உறைக்கும். அதிலி ருந்து நாம் மனந்திரும்ப வேண்டும். அந்த நேரம் ஆவியானவர் அதைக் குறித்து உணர்த்துவார், ஆண்டவர் உணர்த்தும் போது ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்:

**எங்களுக்கு வருகின்ற எதிர்ப்பை சந்திப்பதற்கு மனித பலத்தை அல்ல தேவ ஆவியின் பெலத்தை நாட வேண் டும்.** நெருக்கப்படுகின்ற போது தேவ ஆவியானவரின் பாதத்தில் அமர்ந்து ஆண்டவரே என்று சொல் கின்ற போது சரியான ஞானத்தை எமக்கு தந்து சரியாக நடத்துவார். எங்களுக்கு கஷ்டமாக, நிந்தையாக கூட இருக்கலாம். அல்லது எங்கள் மேல் விழுந்த அடி காயங்கள் மாறாததாக கூட இருக் கலாம். நீ அப்படி நடக்கிற போது உன்னை அழைத்த தேவனுக்கு சாட்சி யாக இருக்க முடியும்.

இரட்சிக்கப்பட்டவர்கள் இப்படி இருக்கிறார்கள் என்றால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அவர்கள் சரியாக பெற்றுக் கொள்ள வில்லை. அபிஷேகம் பெற்றவர்கள் என்றால் வருகிற எங்களுடைய மனித சுபாவத்திற்கு இடத்தை கொடாது சாட்சியை காக்க வேண்டும். எங்களுடைய வாழ்வில் அவர் வந்திருந்தால் தேவனுடைய சத்திய முறை எல்லாவற்றையும் எங்களுடைய வாழ்க்கைக்குள் கொண்டு வருவதற்கு தடையாக இருக்கிற எல்லா தடைகளையும் உடைத்தெறிந்து தேவனுடைய சத்தியத்தில் வாழ்ந்து சாட்சியாக இருப்போம்.

## 03. பெருமூச்சோடு மக்களுக்காக ஜெபிக்க / ஊழியம் செய்ய தேவ ஆவியின் அபிஷேகம் வேண்டும்.

**ரோமர் 8:26 அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்ன தென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுக ளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.** எங்களுக்காக ஆவியானவர் ஜெபித் துக் கொண்டிருக்கிறார் என்று கருதுகி றோம் அது உண்மை தவறில்லை. ஆனால் இன்னொரு சத்தியம் இதற்குள் புதைந்திருக்கிறது. பெரு மூச்சோடு வேண்டுதல் செய்கிற ஆவியான வரை நாம் பெற்றிருந் தால் இன்றைக்கு பாவத்தில் மூழ்கி விழுந்து கொண்டிருக் கிற மனிதர்களுக்காக ஆவியானவ ரோடு இணைந்து பெருமூச்சோடு விண்ணப்பம் பண்ணுவோம்.

**ஏசாயா 61:1-3 (1.) கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்**

**கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், 2. கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச்சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், 3. சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப் படுவார்கள். (லூக்கா 4:18-20)** என்று இயேசுவைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது.

இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசன வெளிப்பாடே "கர்த்தருடைய ஆவியானவர் என்மேல்" மனதுருக்கமுள்ளவராக இயேசு காணப்பட்டார். ஒவ்வொரு தாளிப்பட்ட மனிதனின் வேதனையையும் கவனிக்கும் நிலையிலேயே இயேசு காணப்பட்டார். இயேசு பூமியில் ஊழியம் செய்த மூன்றரை வருடமும் பிறர் குறை தீர்க்கும் பணியே காணப்பட்டது. மனிதனின் நித்திய வாழ்வுக்குரிய போதனையை இயேசு சிறப்பாக செய்தார். மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல ஜனங்கள் காணப்பட்ட போது மனதுருகினார், எருசலேமைப் பார்த்துக் கண்ணீர்விட்டார், லாசருவின் பிரிவின் போது இயேசுவும் அழுதார்.

இன்னொருவருடைய மேன்மைக்கான கதறுதலும், மற்றவர்களின் இரட்சிப்புக்கான தாகமும், மற்றவர்களின் குறை நீங்க வேண்டும் என்கிற ஏக்கமும், சுயநலமற்ற தன்மையும் கர்த்தருடைய அபிஷேகத்தைப் பெற்ற மனிதரிடம் மட்டுமே காணப்படும்.

சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் என்பது அர்த்தத்துடன் காணப்பட வேண்டுமானால் அபிஷேகம் வேண்டும். இன்று சிறுமைப்பட்டவர்கள் சிறுமைப்பட்டவர்களாகவே இருப்பதற்கு காரணம் அபிஷேகத்துடன் கூடிய அணுகுமுறை இல்லாததே. தற்போதைய குறைகளில் ஒன்று கிறிஸ்தவத்தில் ஜனங்களின் காயம் கட்டுவதற்கும், கட்டவிழ்த்தலை செய்யுமளவுக்கும் கிறிஸ்தவர்கள் என பெயர் பெற்றவர்கள் முடியாதவர்களாய் இருப்பது. மற்றவர்களின் பாரங்கள் எமக்கு முக்கியமாகத் தெரிய வேண்டுமானால் அபிஷேகம் தேவை.

அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களின் விம்மல்கள், நரகத்தின் விளிம்பில் நிற்கும் மக்களின் பேராபத்தைக் கண்டு அவர்களுக்காக கண்ணீரோடு, பெருமூச்சோடு ஜெபிக்க, கிறிஸ்தவர்கள் தங்கள் சௌகரிய வாழ்வுக்கான முயற்சியை விட்டு ஆத்தும இரட்சிப்புக்கான அர்ப்பணிப்புக்குத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

இயேசுவின் சுவிசேஷ பணிக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த ஓர் ஊழியன் ஊழிய ஸ்தலத்தில் காட்டுவாசிகளால் கொல்லப்பட்டார். இதை அறிந்த அவருடைய மனைவி தன் மூத்த மகனை தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு தகப்பன் மரித்த இடத்திற்கு அனுப்பினார். செய்தி வந்தது, மகனையும் அவர்கள் கொன்றுவிட்டார்களென. அந்தத்தாய் இரண்டாவது மகனிடம் அந்த மக்களுக்கு தேவனின் அன்பைச் சொல்ல நீ செல்

வாயா? என கேட்ட போது, நான் செல்கி றேன் என இரண்டாவது மகனும்சென்றான். இந்த மகனும் இயேசுவுக்காக ஊழியம் செய்யும் இடத்தில் கொல்லப்பட்டார். இச் செய்தியைக் கேட்டு இத்தாயாரை பத்திரிகை யாளர் ஒருவர் பேட்டி காண வந்த போது, அந்த தாயைப் பார்த்து உங்களுக்கு உங்கள் கணவனும், இரண்டு பிள்ளை களும் மரித்ததனால் கவலை இல்லையா என கேட்ட போது அந்த தாய் சொன்னார் கள்: "கவலைப்படுகிறேன் எதற்காகவென் றால் இயேசு கிறிஸ்துவின் அன்பை அந்த மக்களுக்கு சொல்வதற்கு அவ்விடத்திற்கு அனுப்புவதற்கு எனக்கு இன்னொரு பிள்ளை இல்லையே என்று.

இவர்கள் இப்படி மற்றவர் களுக்காக வாழ்வதற்கு தேவ ஆவி யானவரின் அபிஷேகம் நிறைவாய் இருந்திருக்க வேண்டுமென நான் நம்புகிறேன். மற்ற ஜனங்கள் வாழ வேண்டும், நன்மையடைய வேண் டும், இரட்சிப்படைய வேண்டும் என்பதெல்லாம் கர்த்தருடைய அபி ஷேகம் பெற்றவர்களிடம் காணப் படும். என் ஜெபங்களில் எப்போ தும் உங்களை நினைத்து இடை விடாமல் உங்களுக்காக ஜெபம் செய்கிறேன் என்று பவுல் சொல் கிறார். நாங்கள் படிக்கின்ற நாட்களில் சொல்வோம். இந்த வருடம் போகுதே இல்லை என்று. ஏனென்றால் படிப்பு பாகற்காய் போன்று இருக்கும். ஆனால் இப்போது பார்த்தால் வருஷம் போகின்ற போக்கைப் பார்த்தால் கொஞ்சமாவது அந்த வேகம் குறையாதா என்று எண்ணத் தோன்றுகிறது. இவைகள் எல்லாம் ஆண்டவர் சீக்கிரம் வரப்போகிறார் என்பதற்கு அடையாளம். எனவே உலகத்தில் அழிகின்ற மக்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் - இதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்க வேண்டும். எசேக் கியேலில் பார்க்கிறோம்: திறப்பின் வாசலில் நிற்க ஒருவனை தேடி னேன், ஒருவனையும் காணேன் என்று. தேவ ஆவியைப் பெற்றிருந்தால் அபி ஷேகத்தைப் பெற்றவர்கள் வாழ வேண் டிய வாழ்க்கை முறையில் வாழ வேண்டும் இயேசு சொன்னார் வேறே ஆடுகள் என்று. ஆகவே பெருமுச் சோடு அவர்களுக்காக ஜெபித்து தேவனுக்கு சாட்சியாக வாழ எங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

## 04. மரணம் போன்ற வேதனை வருகின்ற போது அதற்கு முகம் கொடுத்து சாட்சியைக் காத்துக் கொள்ள அபிஷேகம் வேண்டும்.

**அப்போஸ்தலர் 7:55-57 (55.) அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவ னாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற் கிறதையும் கண்டு: 56. அதோ வானங் கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். 57. அப்பொழுது அவர்கள் உரத்தசத்த மாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து,** ஸ்தேவான் ஆவியினால் நிறைந்த மனிதன். மிக வேதனையான மரணத்தை சந்திப் பதற்கு அவன் பெற்றுக்கொண்ட பெலம் அபிஷேகம் தான். உண்மையான பெலவான்களாக தேவ ஆவியால் நிறைந்தவர்களாலே நிற்க முடியும். தேவ சித்தத்துக்கான வைராக்கியத் தையும், பெலத்தையும் நிறைவாக கொண்டிருக்க பரிசுத்த ஆவியான வர் எம்மை நிறைத்திருக்க வேண் டும். ஒரு புறத்தில் பெரிய வைரமா

கவும், இன்னொரு விதத்தில் மிகப் பெரிய மென்மையாகவும் வாழ அபிஷேகம் நடத்தும்.

வேதனையை சகிப்பதில் உறுதியான மனதிடத்துடன் ஸ்தேவான் காணப்பட்டார். அந்த வேதனையின் மத்தியிலும் மன்னிப்பு கொடுக்கும் அவருடைய இளகிய உள்ளம். இது தேவ ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களாலேயே முடியும். அப்போஸ்தலர் 7ஆம் அதிகாரத்தில் ஸ்தேவான் கற்களால் எறியுண்டு மரிப்பதற்கு முன்பதாக தேவனுடைய வார்த்தையை விளக்கிச் சொல்கிறார். உண்மையான அபிஷேகம் பெற்றவர்கள் எப்படிச் சாட்சியாக வாழ்வது என்பதற்கு இது இன்னொரு சான்று. அதாவது இவர்கள் தங்கள் மரண வேதனையிலும் சத்தியத்தைப் பேசுவார்கள். அந்த சத்தியத்துக்காக உறுதியாக இருப்பார்கள். அபிஷேகம் பெற்ற கிறிஸ்தவனாலேயே சத்தியத்துக்குச் சாட்சியாக வாழ முடியும்.

மரணபயமின்றி அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கான ஓட்டத்தின் ஆரம்பம் அபிஷேகத்துடனேயே ஆரம்பிக்கின்றது. தேவனுடைய ராஜ்யத்துக்கு எதிராய் எழும்பும் சத்துருவின் தாக்கத்தையும், சவால்களையும் சந்திப்பதற்கும், ஒரு வேளை சத்தியத்துக்காக இரத்தம் சிந்தப்பட வேண்டி வந்தாலும் அதையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளவும் எமக்கு தேவ ஆவியானவரின் நிறைவுக்குள் மூழ்கியிருக்கும் அனுபவம் வேண்டும்.

மரண வலிகளைப் போன்ற வலியை உள்ளத்தில் உணரும் வேதனைகள் வரக்கூடிய சூழ்நிலைகளை கிறிஸ்தவ வாழ்வில் சந்திக்க வேண்டி வரலாம். அப்போது உங்களுடைய சாட்சியைக் காத்துக் கொள்ள பழகிக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவுக்காக அபிஷேகத்துடன் வாழ்ந்து சாட்சியைக் காத்துக் கொண்ட அப்போஸ்தலர்களை நினைத்துக் கொள்ளுங்கள். வேதாகமம் காண்பிக்கும் பரிசுத்தவான்களை எண்ணிக் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் மீது வைத்த விசுவாசத்திற்காக பல ஆண்டுகள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, மிக கொடூரமான முறையில் வேதனைப்படுத்தப்பட்டும் இயேசுவை மறுதலியாமல் தன்னைக் காத்துக் கொண்ட ரஷ்ய தேசத்தைச் சேர்ந்த "றிச்சட் வும்ரனை" நினைத்துக் கொள்ளுங்கள். ("பாடுகளின் மத்தியில் பரமனின் வெற்றி" என்ற இவருடைய புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்)

மிகப்பெரிய செல்வந்தனாக இருந்து இரட்சிக்கப்பட்ட பின்பு தேவனுக்காக இவைகளெல்லாவற்றையும் விட்டு ஒரு ஏழையாகவே வாழ்ந்து குறைவுகளைத் தேடி வர வேற்று குறைவோடு இயேசுவுக்காக வாழ்ந்து ஓர் ஏழையாகவே கர்த் தருக்காக மரித்தவர் "CT ஸ்டட்" என்ற தேவமனிதன். கௌரவம் நிறைந்த பரம்பரையில் பிறந்து இயேசுவை இரட்சகராய் ஏற்றுக் கொண்ட போது, வீட்டைவிட்டே துரத்தப்பட்டவர் "சாது சுந்தர் சிங்" எமது பரம்பரைக்கே அவமரியாதையை ஏற்படுத்திவிட்டார் என சொல்லப்பட்டு துரத்தப்பட்டார். துன்பத்தின் வழிகளில், மரண வேதனைகள் மனதை துளைத்த போதும் இவர்கள் தேவ ஆவியானவரின் அபிஷேகத்துடன் தங்கள் கிறிஸ்தவ சாட்சிகளைக் காத்துக் கொண்டனர். இன்றும் வாழந்து கொண்டிருக்கும் அனேக விசுவாசப் பிள்ளைகளும், ஊழியர்களும் எத்தனையோ பயங்கரங்கள், வேதனையான சூழ்நிலைகளில் உண்மையான சாட்சிகளாய் வாழ்கிறார்கள்.

வட இந்திய தேசத்தில் தேவனாலே வல்லமையாக இக் காலத்தில் பயன் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சகோ தரன் அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களின் வாழ்வில் எத்தனையோ அபாய சூழ் நிலைகள் வந்த போதும் தேவ ஆவியான வரின் அபிஷேகத்துடன், எத்தனையோ சவால்களை மேற்கொண்டு தேவ பணி யைச் செய்து வருகிறார்கள். ஆம் ஒவ் வொரு கிறிஸ்தவனுக்கும் முன்மாதிரி யான எத்தனையோ அபிஷேகம் பெற்ற மனிதர்களைக் காண்பிக்க முடியும். இயேசுவைப் போன்று, அப்போஸ்தலர் களைப் போன்று, எமக்கு முன் சாட்சியைக் காத்துக் கொண்ட பரிசுத்தவான்களைப் போன்று, ஏன் இன்று எம் மத்தியில் வாழ்ந்து காட்டி வருகின்ற பரிசுத்தவான் களைப் போன்று மரணம் அல்லது மரணத்தைப் போன்ற வேதனைகளின் மத்தியில் கர்த்தருடைய ஆவியின் அபிஷேகத்தினால் நிறைந்து சாட்சியைக் காத்துக் கொள்ளுங்கள். **அபிஷேகம் பெற்றவர்கள் மரணத்தின் நேரத்திலும் சாட்சி யாக நிற்பார்கள்.**

**தனக்கு வேதனையான மரணம் வரும் என்று தெரிந்தும் ஸ்தேவான் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டான்.** வேத ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்: இயேசுவின் இரத்தம் தான் கிறிஸ்தவத்திற்கு அடிப்படை என்று. ஆண்டவர் இயேசு பரிசுத்த ஆவியானவராலே நிறைந்தவ ராகவே ஊழியம் செய்தார். சோதனைகளையும், பாடுகளையும், மரணத்தையும் பரிசுத்த ஆவியா னவரின் நிறைவுடன் இருந்தே ஏற்றுக் கொண்டார். வரலாறு களைப் பார்க்கும் போது, எத்த னையோ பரிசுத்தவான்கள் இரத்த சாட்சியாக மரித்தார்கள், இயேசு வினுடைய அப்போஸ்தலர்களில் வெளிப்படுத்திய விசேஷம் எழுதிய யோவான் தவிர மற்ற அனைவரும் இரத்த சாட்சிகளாய் தான் மரித் தார்கள். அந்திரேயா உயிரோடு தோல் உரிக்கப்பட்டு கொலை செய் யப்பட்டார். அப்போஸ்தலனாகிய பேதுரு சிலுவையில் அறையப்படும் படி கொண்டு செல்லும் போது இயேசுவைப் போன்று சிலுவையில் அறையப்பட நான் தகுதியுள்ளவன் அல்ல என்னை சிலுவையில் தலை கீழாக அறையுங்கள் என்று வேண்டிக் கொண்டு அவ்வாறே தலைகீழாக அறைந்து கொலை செய்யப்பட்டார். ஒரு கட்டத்தில் பேதுரு இயேசுவை தனக்கு தெரி யாது என்று கூறினார், ஆனால் தேவ ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற போது இயேசுவுக்காக மரிப்பதற்கும் ஆயத்தமானார்.

ரோமா புரியில் நீரோ மன்னன் அப்போஸ்தலனாகிய பவுலின் தலையை வெட்டுவதற்கு அனுமதி கொடுத்து பவுல் தலை துண்டிக்கப்பட்டு மரித்தார். இவர்க ளெல்லாம் ஆவியி னால் நிறைந்த மனிதர்கள். எம்முடைய வாழ்வில் இதை விட மரித்திருந்தால் நல்லது போன்ற காரியங்கள் வரும் அதன் மத்தியில் தேவனுக்கு சாட்சியாக இருக்க வேண்டும்.

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வருகின்ற போது பெலன் அடைந்து எப்போதும், எந்த இடத்திலும், தேவனுக்காக சாட்சியாக இருங்கள். தேவனு டைய சமூகம் செல்ல வேண்டும் என்றால் அவருடைய பரிசுத்த ஆவி என்ற முத்திரையைப் பெற்றவர்க ளாய் சாட்சி வாழ்க்கை வாழ வேண்டும். அந்த நித்திய வழியில் நடத்துகின்ற பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று அவரு டைய வருகைக்காய் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்!

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)
## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை **(Sri Lanka)** | **220.00** |
| இந்தியா **(India)** | **390.00** |
| கனடா, அமெரிக்கா **(Canada & USA)** | **840.00** |
| சிங்கப்பூர், மலேசியா **(Singapore & Malaysia)** | **420.00** |
| மத்திய கிழக்கு நாடுகள் **(Middle East Countries)** | **510.00** |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா **(Germany, England, Italy & Australia)** | **720.00** |

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" /
**ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

---

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..............................................................

முகவரி:............................................................

.......................................................................

.......................................................................

**உங்களுக்காகவே!**

பிரதி மாதந்தோறும் இறுதி வெள்ளிக் கிழமைகளில்
மாலை 5:00 மணிக்கு

## சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்



- வியாதிப்பட்டவர்கள்
- தேவையுள்ளவர்கள்
- பிசாசின் பிடியில் உள்ளவர்கள்

போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

To: ..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

*Zion Church Office,*
*No. 347, Navalar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351